# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி27 செவ்வாய்க்கிழமை (12-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:221


# இராணுவத் தாக்குதல்களை குடாநாட்டில் உடன் நிறுத்துக!

## தேர்தல் ஆணையாளரின் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து வலியுறுத்து

கொழும்பு,செப்ரெம்பர்12

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேர்தல் சுமுகமாக நடைபெறவேண்டுமாயின் அரசாங்கப் படைகள் அங்கு நடத்தும் இராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.**

**மேற்கண்டவாறு தேர்தல் ஆணையாளர் நேற்று நடத்திய விசேட கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.**

**தமிழ்க்கட்சிகளின் இக்கோரிக்கையை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா உறுதியளித்தார்.**

தேர்தல் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்காக 22 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய மாநாடு ஒன்று தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30மணிக்கு நடைபெற்றது.

அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.மாவட்ட நிலைமையை ஆராய்வதற்கான விசேட கூட்டம் இடம்பெற்றது. பிரஸ்தாப விசேடகூட்டத்தில் தேர்தல் ஆணையாளருடன் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்கு பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஏ.ஏ.சமரசிங்காவும் பங்குபற்றினார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு பாதுகாப்பு வழங்க மறுப்பு

கொழும்பு,செப்.12

பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வசதியாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலதிகப்பாதுகாப்பு வழங்குமாறு தாம் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க.வின் பேச்சாளர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.

கட்சித்தலைவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குவது படைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுடனான பேச்சு குறித்து பாலசிங்கத்தின் நூல்!

### கடந்தவாரம் வெளியாகியது

லண்டன்,செப்.12

1994 ஆம், 1995 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்கள் தொடர்பான விமர்சனங்கள் மற்றும் கண்ணோட்டங்கள் அடங்கிய நூல் ஒன்றை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் -

இரு தலைவர்களின் பேச்சுவார்த்தை விடயத்தில் வரிசைக்கிரம ஒழுங்கமைப்புடன் கூடிய தொடர்புகளையும் -

ஆரம்பத்தில் ஆக்கபூர்வமான முறையில் அமைந்து படிப்படியாக ஏமாற்றத்துக்குள்ளான விடயங்களையும் - தனது நூலில் அன்ரன் பாலசிங்கம் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

"அரசியலில் இரட்டைத்தனம்" **(The Politics of Duplicity)** என்ற இந்த நூல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

(இ-3-7)

## வவுணதீவு முகாம் மீது நேற்றுத் தாக்குதல்!

மட்டக்களப்பு,செப்.12

மட்டக்களப்பு மாவட்டம் - வவுணதீவுப் பிரதேச செயலகத்துக்கு அருகில் நேற்றுக் காலை 9 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர்; ஒருவர் காணாமற் போய் விட்டார்; ஒருவர் காயமடைந்தார்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று மாலை இதனைத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வலையிறவுப் பாலத்தின் ஊடாக மட்டக்களப்பு நகருக்கு வரும் பொதுமக்களைச் சோதனை செய்வதற்குச் சென்ற படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7-8)

## கட்சியின் ஆயுதங்களை களையுமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

கொழும்பு,செப்.12

யாழ்.மாவட்டத்தில் அச்சமின்றி மக்கள் தேர்தலில் வாக்களிக்கவும் சகல கட்சிகளும் சுதந்திரமாகப் பிரசாரம் மேற்கொள்ளவும் வகதியாக ஆயுதம் வைத்திருக்கும் குழுக்களிடம் இருந்து அவற்றைக் களையவேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் நேற்றுக் கூட்டிய விசேட கூட்டத்தில் பங்கு பற்றிய தமிழ்க் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் பேசுகையில், யாழ்.மாவட்டத்தில் தீவுப்பகுதியில் ஒரு கட்சியினர் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். இதனால் ஏனையோர் அங்கு சென்று பிரசாரம் செய்ய முடியாதுள்ளது. எனவே அவர்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் எனக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த படையினர் 17ஆக உயர்வு

கொழும்பு,செப்12

கொழும்புத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஓர் அதிகாரி உட்பட 17 படையினராக உயர்ந்துள்ளது என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தச் சண்டையில் நான்கு அதிகாரிகளும்,54படையினரும் காயமடைந்ததாகவும் அது தெரிவித்துள்ளது.

புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தைப் பலப்படுத்தும் பணியில் படையினர் ஈடுபட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-8)

## 16 சடலங்கள் புலிகளிடம் இன்று கையளிக்கப்படும்!

### நீர்வேலித் தரவைப் பகுதியில் வைத்து

யாழ்ப்பாணம்,செப்.12

அரியாலை, செம்மணி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டைகளின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் 16 பேரின் சடலங்கள் இன்று காலை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகளால் ஒப்படைக்கப்படவிருக்கின்றன.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் இரவு ஒப்படைக்கப்பட்ட 14 சடலங்களும் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்ட இரு சடலங்களும் இன்று காலை படையினரால் பொறுப்பேற்கப்படும்.

நீர்வேலியில் வைத்து அவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்.

அங்கிருந்து தமது வாகனங்களில் அவற்றை எடுத்துச் சென்று நீர்வேலி தரவைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் கையளிக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஏற்பாடு செய்துள்ளது என்று அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (இ-3-139)

## திருமலையில் நேற்று மூவர் உயிரிழப்பு

திருகோணமலை,செப்.12

திருகோணமலை மாவட்டம் - சீனன்குடாப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக் காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் படையினர் தரப்பில் 3பேர் உயிரிழந்தனர் எனவும் -

4பேர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் எனவும்-

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (இ-7-8)

## 2 சிப்பாய்கள் உட்பட நால்வர் பலியாகினர்

### தற்கொலைத் தாக்குதலில்

கொழும்பு,செப்.12

வெலிஓயாவில் போகஸ்கண்டிய என்னுமிடத்தில் நேற்று முன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் தம்வசம் வைத்திருந்த குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

இதில் இரு சிப்பாய்களும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக பதவியாப் பொலீஸாரால் அவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கிழக்குத் திமோர் பாணியில் இங்கும் சர்வஜன வாக்கெடுப்பு

### அமெரிக்க எம்.பி. வலியுறுத்து

வாஷிங்ரன்,செப்.12

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வராவிடில் -

இலங்கைத் தமிழ் மக்கள் தனி நாட்டை விரும்புகின்றார்களா, அல்லது கூட்டாட்சியை விரும்புகின்றார்களா என்பதைத் தீர்மானிப்பதற்கு, கிழக்குத் திமோரில் நடைபெற்றது போன்று ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு தயாராக இருக்க வேண்டுமென அந்த நாட்டின் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் அமெரிக்கா சுட்டிக்காட்டவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரான பிராட் ஷேர்மன் அமெரிக்க வெளிவிவ

(12ஆம் பக்கம் பார்க்க)




## விசேட கப்பல் சேவை நாளை?

யாழ்ப்பாணம்,செப்.12

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெறவிருந்த விசேட பயணிகள் கப்பல் சேவை அனேகமாக நாளையே இடம்பெறலாம் என யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக்கப்பலில் பயணம் செய்வதற்காக எண்ணூறு பேருக்கு நேற்றுப் பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டன.

அதேசமயம் - திட்டமிட்டபடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவரும்,
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாச பணிப்பாளர்சபை உறுப்பினருமான

**திரு. சின்னப்பிள்ளை சுப்பிரமணியம ஜே.பி.**

**அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**தலைவர்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**யாழ். மா.வி.நு.கூ.ச.சமாசம்.**

*111, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/12898)



# கேள்வி அறிவித்தல்

## வடபிராந்திய போக்குவரத்துச்சபை,
## கோண்டாவில்.

யாழ். பேருந்து நிலையத்தில் இரு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு இக்ராட்டில் (ICTAD) எம்-8 பகுதியில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்கள், கட்டட அமைப்பு வரைபடங்கள் ஆகியவற்றிற்கும் மேலதிக விவரங்களுக்கும் சிவில் பொறியியல் பகுதி, வ.பி.போ.சபை. கோண்டாவிலில் தொடர்புகொள்ளவும்.

மீளளிக்கப்படாத கட்டுப்பணமாக ரூபா 500/- உம், மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூ.5000/- உம் செலுத்தி 20-09-2000 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்கள் 29-09-2000 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வ.பி.போ.சபை கூறுவிலை சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.


**V.S.சொக்கலிங்கம்**
*பொதுமுகாமையாளர்,*
*வ.பி.போ. சபை, கோண்டாவில்.*

*வடபிராந்திய போக்குவரத்துச்சபை,*
*பலாலி வீதி,*
*கோண்டாவில்.*

(C/12895)



# காணவில்லை



30.08.2000 அன்று திருகோணமலையில் இருந்து யாழ். நோக்கிப் புறப்பட்ட City of Trinco வில் பயணஞ் செய்த மீசாலையைச் சேர்ந்த

**சின்னையா சிவராஜா**

என்பவரை அன்று முதல் காணவில்லை. இவரது பயணப் பற்றுச்சீட்டு இல.003952, தொடர் இல.154, மேற்படி விவரங்கொண்ட இவரைப் பற்றித் தகவல் அறிந்தோர் தயவுசெய்து

**திருமதி சிவராசா செல்வராணி**
**மோட்டன் சீமா, அல்வாய் கிழக்கு, அல்வாய்**
*என்னும் முகவரியில் அல்லது*

தொலைபேசி 070 212844 என்னும் இலக்கங்கொண்ட தம்பி தொலைத் தொடர்பகத்தில் உடன் தொடர்புகொண்டு அறியத் தரவும்.

தகவல்:
**சி.செல்வராணி** (மனைவி)

(78306)



We Serve

# சுன்னாகம், சாவகச்சேரி
# லயன்ஸ் கழகங்கள்
## இணைந்து நடத்தும்
# மருத்துவ முகாம்

**சலரோகம், இரத்த அழுத்தம் ஆகிய நோய்களை இனங்காணவும் பொருட்டும் கண்பார்வை குறைந்தவர்களுக்கு கண்ணாடி வழங்கும் பொருட்டும் மேற்படி மருத்துவ முகாம்**

**Dr. V.யோகேஸ்வரன்**
**Dr. K.சிவராஜா**

ஆகியோர் தலைமையில் இடம்பெறும். பன்னாலை, அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம் ஆகிய கிராம அலுவலர் பகுதியில் வசிப்பவர்கள் வந்து பயன்பெற வேண்டுகின்றோம்.

**இடம் :- மகாஜனசபை மண்டபம், அளவெட்டி.**
**காலம்:- 13-09-2000 காலை 8.00 மணி.**

**K.சற்குணதேவன்**
**தலைவர்**
**லயன்ஸ்கழகம், சாவகச்சேரி.**

**செ.சச்சிதானந்தம**
**தலைவர்**
**லயன்ஸ் கழகம், சுன்னாகம்.**

(78312)


# விமானங்கள் தாழப் பறப்பதற்கு ஈ.பி.டி.பி. அமைப்பும் ஆட்சேபம்

## விமானப்படைத் தளபதியிடம் முறையீடு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகள் மற்றும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் மீது யுத்த விமானங்கள் தாழப் பறந்து செல்வதற்கு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான கௌரவமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும், நடைமுறைச் சாத்தியமான வழியில் யுத்தத்தை நிறுத்தி எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் நாம் பாடுபட்டு வருகின்றோம்.

இந்த வேளையில் அர்த்தமற்ற யுத்தத்தில் இரு தரப்பினரும் ஈடுபட்டு அநியாயமாக உயிர்களைப் பலி கொடுப்பதை நாம் வெறுக்கின்றோம். அதே வேளை இந்த யுத்தம் எமது மக்களை மீண்டும், மீண்டும் நிம்மதியற்ற அவல வாழ்க்கைக்குத் தள்ளிவிடுகின்றது. இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்தி இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்ப பாதிக்கப்பட்ட மக்களும் எம்மோடு சேர்ந்து தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

விமானங்கள் தாழப் பறப்பதால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து விமானப்படைத் தளபதி ஜெயலத் ஜெயக்கொடியுடன் நான் பேச்சு நடத்தினேன். அப்போது அவர் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் இனிமேல் தமது நடவடிக்கைகளை மாற்றியமைப்பதாக உறுதியளித்தார் - என்றுள்ளது.

(இ-7)

## தேர்த்திருவிழா யாழ்.தேவையில்

யாழ்ப்பாணம்,செப்.12

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளது. தீர்த்தத்திருவிழா நாளையும், பூங்காவனத்திருவிழா நாளை மறுதினமும் இடம்பெறும்.

தேர்த்திருவிழா பற்றிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு இன்று மாலை யாழ்.சேவையில் ஒலிபரப்புச் செய்யப்படும் எனவும் -

பூங்காவனத்திருவிழா அன்று இரவு மேற்படி ஆலயச்சூழலில் ஊரடங்கைத் தளர்த்த படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாகவும் -

இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ள புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் இராசேந்திரம் செல்வராஜா அறிவித்துள்ளார்.

(இ-7)

## கிளித்தட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.12

நெடுந்தீவு கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கிளித்தட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.00மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க. அரசரட்ணம் தலைமையில் நடைபெறும். (இ-7)

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.12

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

காயத்திரி மந்திரஜெபம், இலட்ச அர்ச்சனை, பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு என்பன இடம்பெறும். தொடர்ந்து நாராயண சேவையும் நடைபெறும்.

(ஐ)


**நாகம்ஸ்**
**சுன்னாகம்**

இன்று மட்டும்
*அஜித் – ஷாலினி*
நடிப்பில்

**அமர்க்களம்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)



**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**

ரசிகர்களே! கடைசிவாரமாக

கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

**பூவேலி**

காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்) (C/12325)


# மரண அறிவித்தல்கள்

இலக்கணவித்தகர்

## இராமசாமி நமசிவாய தேசிகர்

கட்டுவன், மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கண வித்தகர் இராமசாமி நமசிவாயதேசிகர் அவர்கள் நேற்று 11-09-2000 திங்கட்கிழமை காலை சென்னையில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**ந.பாலச்சந்திரன்**(மகன்)

*அரசடி வைரவர் கோயிலடி,*
*சங்கானை.*

(78318)

## சின்னப்பு செல்லத்துரை

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்லத்துரை நேற்று (11-09-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக்கணவரும், பத்மநாதன், வாமதேவன், சண்முகநாதன் (தலைவர் - விவசாய சம்மேளனம் உடுவில் வடக்கு), பற்குணம், தவமணிதேவி(ஜேர்மனி), செல்வராசா(ஜேர்மனி), யோகநாதன்(கனடா), சிவராஜேஸ்வரன்(சுவிஸ்), சந்திராதேவி, ஜெயச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ராதாதேவி, சந்திராதேவி, பத்மினிதேவி, பாலசுப்பிரமணியம்(ஜேர்மனி), பாலசரஸ்வதி(ஜேர்மனி), தமயந்தி(கனடா), சுவிதா(சுவிஸ்), துஷிதலா(சுவிஸ்), சிவகுமார்(பவா), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2000) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
செ.சண்முகநாதன் (K.V.S) (மகன்)
செ.சிவகுமார் (பவா) (மருமகன்)

*V.C ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(78302)

## இராமசாமி பரமகுரு

(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

பருத்தித்துறை புலோலி மேற்கைச் சேர்ந்த இராமசாமி பரமகுரு 08-09-2000 ஆம் திகதி வெள்ளிக்கிழமை U.K இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வி.இராமசாமி (ஓய்வுபெற்ற முடிக்குரிய வழக்கறிஞர், அநுராதபுரம்) மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், லீலாமணி, சத்தியபாமா, இராதாகிருஷ்ணன், டாக்டர் யசோதரா, அனுஷியாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சீதா வேல்முருகு, மீனா திருநாவுக்கரசு, பார்வதிஅம்மாள் சிவராமலிங்கம், வி.ஆர்.சரவணபவான், ஆர்.சதாசிவம்பிள்ளை பத்மநாயகி சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களானு கே.பரம், டாக்டர் எம்.சிவநேசன், சில்வி, டாக்டர் என்.சதானந்தன், டாக்டர், எம். தர்மராஜா ஆகியோரின் மாமனாரும், மெலனி, டாக்டர் ஷர்மிளா, பிரேமிலா, கிளரா, றொகான், பமிலா, மிதிலா, ஐங்கரன், பிரம்மன் ஆகியோரின் பேரனும் நதானியலின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-09-2000 வியாழக்கிழமை **Upminster Creamatorium Essex** இல் நடைபெறும்.

**Mount Crest 1, Widworthy Hayes, Hutton Mount, Brent wood Essex.**
**CM 13 2 LN, U.K**

தகவல்:
S.Mandaleswaran,
**எஸ்.சிறிதரன்** (பேரன்)
*இணைப்பதிகாரி,*
*மனிதஉரிமைகள் ஆணைக்குழு,*
*வவுனியா.*

(C/12901)

## திருமதி தேவகி தியாகராசா

இராமலிங்கம் வீதி, உடுவிலைப்பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவகி தியாகராசா நேற்று 11-09-2000 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் இராமலிங்கம் கோவிந்தம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற தியாகராசா(ஓய்வுபெற்ற எழுதுநர்) அவர்களின் அன்பு மனைவியும், தியாகலிங்கம் (ICRC), காலஞ்சென்ற தியாகேஸ்வரன்(கொழும்பு), தியாகசீலன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தியாகச்சந்திரன (வலி.வடக்கு பிரதேசசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீஸ்கந்தராசா(ஓய்வு பெற்ற I.P, கொழும்பு), காலஞ்சென்ற செல்வராசா(ICRC) அவர்களின் சகோதரியும், மங்களராணி, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், லலிதா, மீரா (கொழும்பு), திரவியம், நேசபவானி (பிரதேச செயலகம், உடுவில்), சந்திரமோகன், மங்களசிறி, சிறிதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், றூபநிதா, தியாசினி, சர்மிளா, சபேசன், நிரோஜா, துவாரகன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி.தியாகலிங்கம், தி.தியாகசீலன்,
தி.தியாகச்சந்திரன.

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.*

(78317)

# எதிர்த்தரப்பு மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல்:

# யூகோஸ்லாவியாவில் தேர்தலையொட்டி மிலேசேவிக் அடக்குமுறை பிரயோகம்!

## மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவிப்பு!!

பெங்கிரேட்,செப்ரெம்பர்12

**யூகோஸ்லாவியாவில் தேர்தல் நடைபெறவுள்ள சமயத்தில் ஜனாதிபதி சொலபொடான் மிலேசேவிக் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.**

**எதிர்க்கட்சி ஆதரவு மாணவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்களையும் அவை கண்டித்துள்ளன.**

எதிர்வரும் 24ஆம் திகதி யூகோஸ்லாவியாவில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மிலேசேவிக்கின் ஆதரவாளர்கள் தோல்வியடையும் வாய்ப்புகள் அதிகமிருப்பதாகக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து எதிர்கட்சியினர் மீது பொலீஸாரும், அதிகாரிகளும் அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தேர்தலைக் கண்காணிக்கும் ஏற்பாடுகளைச் செய்து வரும் அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

சமீபத்தில் பல்கலைக்கழகம ஒன்றிற்குள் புகுந்த பொலீஸார் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் என்று கருதப்படும 'ஓட்போர்' இயக்கத்தைச சேர்ந்த 7 மாணவர்களை தடிகளாலும் இரும்புச் சங்கிலிகளாலும் கொடூரமாகத் தாக்கி கைதுசெய்தனர்.

மற்றைய மாணவர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி போராட்டம் நடத்திய பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச் செயலை பல மனித உரிமை அமைப்புகள் கண்டித்துள்ளன. தோல்விப்பயத்தால் தேர்தலில் வெற்றிபெற மிலேசேவிக் ஊழல் மற்றும் அடக்குமுறைகளைக் கையாள்வதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதேசமயம் -

தமது வெற்றியை ஜீரனிக்க முடியாத மேற்கு நாடுகள் தேர்தலை மோசடியாகச் சித்தரிப்பதற்கு முயற்சிப்பதாக மிலேசேவிக் தெரிவித்துள்ளார். (ஓ-6)



**அதிபர் சொலபொடான் மிலேசேவிக் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன். 1997ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்ட சமயத்தில் எடுக்கப்பட்ட படம்.**

## பங்களாதேஷில் நிலத்தடி நீரில் நச்சுத்தன்மை

டாக்கா,செப்.12

பங்களாதேஷில் நிலத்தடி நீரில் இயற்கையாகவே நச்சுத்தன்மை கலந்து வருவதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிணறு போன்ற நிலத்தடி நீர் பெறும் இடங்களில் சமீபகாலமாக தண்ணீர் நஞ்சாகி வருவதால் அதனை அருந்திய உயிரினங்கள் பலவும் உயிரிழந்துள்ளன.

இதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ள போதிலும் மக்களிடையே அச்சஉணர்வு அதிகரித்துள்ளது. (ஓ)

# சென்னை விநாயகர் ஊர்வலத்தில் குழப்பம்; இந்து முன்னணித் தலைவர் கைதானார்!

## தமிழகத்தில் கடும் பதற்றம்!!

சென்னை,செப்.12

தமிழகத்தில் விநாயக சதுர்த்தி ஊர்வலத்தை அனுமதிக்கப்படாத பாதையில் செலுத்த முயன்றதாக இந்து முன்னணித் தலைவர் ராம. கோபாலனும் அவரது ஆதரவாளர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர்.



ராம. கோபாலன்

இதனையடுத்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அசம்பாவிதச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதால் பதற்றம் நிலவுகிறது.

விநாயக சதுர்த்தியை முன்னிட்டு சென்னை நகரின் பல இடங்களிலும் கடந்த 40நாள்களாக இந்து முன்னணித் சார்பில் பூஜிக்கப்பட்ட பிரமாண்டமான விநாயகர் சிலைகள் கடலில் கரைப்பதற்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

திருவல்லிக்கேணி பெரிய மசூதி வழியாக இந்த ஊர்வலம் செல்வதற்கு பொலீஸார் அனுமதி மறுத்திருந்தனர். ஆனால் ஊர்வலத்தின் போது மசூதி வழியாக ராம.கோபாலனும் மற்றவர்களும் செல்ல முயன்றதாகவும், அதனைத் தடுப்பதற்காக பொலீஸார் அவர்களை கைது செய்ததாகவும் கூறப்படுகின்றது. ராம. கோபாலன் கைது குறித்து செய்திகள் பரவியதை அடுத்து தமிழகத்தின் சில இடங்களில் அரசு பஸ்கள் கொளுத்தப்பட்டது உட்பட அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உலக அரங்கில்

ஆண்டுதோறும் நடக்கும் விநாயக சதுர்த்தி ஊர்வலம் இஸ்லாமியர் அதிகமாக வசிக்கும் திருவல்லிக்கேணிப்பகுதியை கடக்கும் போது கடும் பதற்றம் உருவாவதும் சில சமயங்களில் வன்முறைகள் வெடிப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஓ)

# ஆட்சியைப் பகிரும் கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி அமைப்போம்!

## மூப்பனார் உறுதி!!



மூப்பனார்

சென்னை,செப்.12

ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி அமைக்கப் போவதாக த.மா.கா தலைவர் மூப்பனார் உறுதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள தேர்தலை அடுத்து அமையும் ஆட்சி கூட்டணி அரசாக இருக்கும் என்றும் மூப்பனார் அப்போது தெரிவித்தார்.

இதற்கிடையில் -

அ.தி.மு.க. அவைத்தலைவர் காளிமுத்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி ஏற்பட என்றுமே வாய்ப்பு உருவாகப் போவதில்லை என்று கூறியுள்ளார். (ஓ-8)

# ஓப்பியம் கடத்திய ஒட்டகங்களை ஈரானிய பொலீஸார் பிடித்தனர்

தெஹ்ரான்,செப்.12

ஒப்பியம் என்ற போதைப் பொருளை ஒட்டகங்களில் ஏற்றிக் கடத்தும் முயற்சியை ஈரானியப் பொலீஸார் முறியடித்தனர்.

பாகிஸ்தானுடனான ஈரான் எல்லையில் ஆயிரத்து 500 கிலோகிராம் ஒப்பியத்தை 8ஒட்டகங்களில் ஏற்றிக் கொண்டு எல்லை தாண்டி வந்தவர்களை பொலீஸார் விரட்டிப் பிடிக்க முயன்றனர்.

ஆனால கடத்தல்காரர்கள பாகிஸ்தானுக்குள் தப்பி ஓடிவிட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஒப்பியத்துடன் ஒட்டகங்கள் மட்டும் பொலீஸாரிடம் பிடிப்பட்டன.(ஓ)

# தேர்தல் வன்முறையில் பாதிக்கப்பட்டோர் சிம்பாப்வே அதிபர் மீது வழக்கு தாக்கல்!

## 40 கோடி டொலர் நஷ்டஈடு கேட்டு

வாஷிங்ரன்,செப்.12

சிம்பாப்வேயில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் இடம்பெற்ற வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிபர் ரொபேர்ட் முகாபே மீது 40 கோடி டொலர்கள் நஷ்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் வன்முறைகளின் போது உயிரிழந்த 3பேரது உறவினர்களும், தாக்குதலுக்கு உள்ளான ஒருவரும் அதிபர் முகாபே மீது அமெரிக்காவிலுள்ள மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் கடந்த வாரம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடும் அழைப்பாணை, சமீபத்தில் புத்தாயிரம் ஆண்டின் ஐ.நா.உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா வந்திருந்த சிம்பாப்வே அதிபரிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சில மாதங்களின் முன்னர் சிம்பாப்வேயில் தேர்தல் நடைபெற்ற போது அதிபர் முகாபேயின் ஆதரவாளர்கள் எதிர்க் கட்சியினர் மீதும் விவசாய பண்ணைகளின் உரிமையாளர்களான வெள்ளையர்கள் மீதும் வன்முறைத் தாக்குதல்கள் நடத்தியதாக மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் குற்றஞ்சாட்டி வந்ததும் -

தேர்தலில் அதிபரின் கட்சியினரே அதிக அளவில் வெற்றிபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

# பலஸ்தீன தனிநாடு பிரகடனம் நவ.15க்கு பிற்போடப்பட்டது!

காசா,செப்.12

பலஸ்தீன தனிநாட்டைப் பிரகடனம் செய்வது எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பலஸ்தீன தேசிய சபை அறிவித்துள்ளது.

இஸ்ரேலுடன் பலஸ்தீன பிரச்சினை தொடர்பாக உடன்பாடு ஏற்படுத்துவதற்கான காலக்கெடு மேலும் இரண்டு மாதங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் சபை தெரிவித்துள்ளது.

காசாவில் 129 உறுப்பினர்கள் அடங்கிய பலஸ்தீன தேசிய சபை நடத்திய இரண்டு நாள்கள் ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் வெளியிட்ட அறிக்கையில் இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதே சமயம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பலஸ்தீன நாட்டுக்கான அரசமைப்பு வகுக்கப்பட்டு தேர்தலுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று பலஸ்தீன தேசிய சபை கூறியுள்ளது. சுதந்திரத்தனிநாடு பிரகடனத்தை தாமதப்படுத்தும் பலஸ்தீனர்களின் முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (ஓ-8)

நடைமுறைச் சாத்தியமான வழிகளில்
அன்றாடப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவும்
தொலை நோக்குச் சிந்தனையுடன்
அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணவும்
என்றும் எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

(C/12863)

# உளவியல் கருத்தரங்கு


யாழ்ப்பாணம், செப். 12

அகவொளி நிலையத்தினால் நடத்தப்படும் உளவியல் கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

''உணர்வுகளின் தாக்கமும், செல்வாக்கும்'' என்ற பொருளில் உளவியலாளர் அருட்திரு எஸ். டேமியன் கருத்துரை வழங்குவார்.

(இ-9)

# ஓராண்டு நினைவலைகள்



மேதினியில்
13
—
06
—
1981

சந்நிதி முருகன் பதம்
24
—
08
—
1999

செல்வி
## திருமகள் கனகசபை

திதி: 12–09–2000

அறிவிற் சிறந்து
அன்பைச் சொரிந்து
பாச மனங்களில்
ஆழப் பதிந்த
திருமகளே!
உடன்பிறப்பே!
உம்மைப் பிரிந்து
ஆறாத் துயரில்
நாம் மூழ்கி
ஆண்டு; ஒன்றென்ன
நூறு போனாலும்
துயரம் ஆறாது
பாசம் மாறாது!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா, அம்மா,
அண்ணாமார், தம்பிமார்,
பெரியப்பாமார் குடும்பம்,
சித்தப்பாமார் குடும்பம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(78187)

# குடாநாட்டுக்கான தபால்கள்
# திருமலையில் பெருமளவு தேக்கம்

கொழும்பு, செப். 12

யாழ். குடாநாட்டுக்கு அனுப்புவதற்காகத் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட தபால் பொதிகள் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகப் பெருமளவில் தேங்கி இருப்பதாக திருகோணமலை பிராந்திய தபால் திணைக்கள அத்தியட்சகர் கொழும்பு பிரதம தபால் அலுவலகப் பொறுப்பதிகாரியான தபால் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

தபால் மா அதிபருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்தெரிவித்திருப்பதாவது:

திருகோணமலை ஊடாக யாழ். குடாநாட்டுக்குத் தபல் பொதிகளை அனுப்பி வைப்பதற்காகக் கொழும்பிலிருந்து திருமலைக்குத் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன தற்போது யாழ். குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்காக 636 தபால் பொதிகள் திருகோணமலை தபால் அலுவலகத்தில் குவிந்திருக்கின்றன. இவற்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்து கொள்வதில் இருக்கும் சிரமம் காரணமாக பொதிகள் இங்கு தேங்கிக் கிடக்கின்றன.

திருகோணமலை தபால் அலுவலகத்தின் அதிகாரிகள் ஓய்வு அறை, தபால் அதிபரின் அறை ஆகியவற்றில் இவை தற்போது வைக்கப்பட்டுள்ளன. மேலும் தபால் பொதிகள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டால் அவற்றை பாதுகாப்பாக வைக்க முடியாத நிலை காணப்படுகின்றது: இடநெருக்கடியும் இருந்து வருகிறது.

சிற்றி ஒவ் றிங்கோ, லங்கா முடித்த கப்பல்கள் மூலம் தபால் பொதிகள் அனுப்பப்படுவதற்கு எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

தற்போது தடவைக்கு 100 தபால் பொதிகளே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுகின்றன.

ஜாவா 'கல்வ' கப்பல் மூலம் தடவைக்கு 100 தபால் பொதிகள் அனுப்பப்படுகின்றன. இத்தொகையை 200 ஆக அதிகரிப்பதற்கு எடுத்த நடவடிக்கையும் பலன் தரவில்லை.

ஆகவே திருகோணமலையில் தற்போது தேங்கியுள்ள தபால் பொதிகள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படும் வரை, மேலதிகமாக கொழும்பிலிருந்து தபால் பொதிகளை அனுப்பி வைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6-10)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
12
—
06
—
1979

உதிர்வு:
12
—
09
—
1995

## செல்வன் சிறிஸ்கந்தராசா ரமேஷ்குமார்

(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்)

பாசமிகு ரமேஷ் உந்தன்
பண்புகளை நினைக்கையிலே
பூசிக்கத் தோன்றுதடா!
பூரிக்க வைக்குதடா ......
யோசிக்க யோசிக்க யுகங்கள் கடந்தாலும்
நீ சிரிக்கும் முகத்தோற்றம் நெஞ்சத்தைக்
கடக்காது!

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(78146)

# நினைவஞ்சலி



அமரர்
## திருநாவுக்கரசு ஜெயாதரன்

மலர்வு 01-02-1971 உதிர்வு 30-05-1987



அமரர்
## முத்து திருநாவுக்கரசு

மலர்வு 30-10-1943 உதிர்வு 03-09-1990

தந்தையும் தாயும் உற்றசோதரர் பார்த்திருக்க
துட்டர்கள் உன்னுயிரைத் துடிதுடிக்கப் பறித்தனரோ!
வெந்து நிதம் நாம்படுந் துயரந் தன்னை
வந்து நீயும் ஆற்றாயோ என்றிங்கு நாயிருக்க
சிந்தையுறை அன்புத் தந்தையையும் உன்னருகே
சீக்கிரமே அழைத்தனையோ! எம்பிறப்பில் இருவருமே
வந்தெம்மைப் பார்ப்பீரோ! கதியிழந்து திசைமாறி
வழையறியாது தவிக்கின்றோம்! வருவீரோ; விதியிதுவோ?

4, நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(78384)

# குருபூர்ணிமா மலர்

யாழ்ப்பாணம், செப். 12

செல்வச் சந்நிதி ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம விசேட கருமபீடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை குருபூர்ணிமா மலர் விற்பனை இடம்பெறும்.

(இ-9)

# பொலீஸாரின் விடுமுறைகள் ரத்து

கொழும்பு, செப். 12

எதிர்வரும் தேர்தலை யொட்டி வன்செயல்கள் அதிகரித்து வருவதை அடுத்து சகல பொலீஸாரின் விடுமுறைகளையும் பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ரத்துச் செய்துள்ளார். (இ3-6)

# கமக்காரர் ஓய்வூதிய சான்றிதழ்

யாழ்ப்பாணம், செப். 12

கமக்காரர் ஓய்வூதிய சமூக நலன்புரித்திட்டத்தில் இணைந்தவர்களுக்கான கழிவு ஒப்பந்தச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. உரியவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் மாவட்ட அலுவலக அதிகாரி கேட்டுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரை ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களது சான்றிதழ்களே கிடைத்துள்ளன.

நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்தில் அமைந்துள்ள காப்புறுதிச் சபையின் மாவட்ட அலுவலகத்தில்மேற்படி சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

உதயன்

## இந்தியாவும் ஈழ அகதிகளும்

**இலங்கை அகதிகளை இங்கு வர அனுமதியாதீர்கள்; ஆனால் வந்தவர்களுக்கு உதவுங்கள் -**

**இலங்கை அகதிகள் தொடர்பாக, இந்தியாவின் வெளியிடப்படாத கொள்கை இதுதான். இந்திய அரசாங்கம் இவ்வாறு சொல்லவில்லையாயினும், உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையாயினும், 'இந்து'ப் பத்திரிகை இதனைச் சொல்லியிருக்கின்றது. நெருப்பு இல்லாமல் புகையாது.**

**1983ஆம் ஆண்டிலிருந்தே இலங்கைத் தமிழர்களுக்குத் தஞ்சமளித்து, அகதிகளை ஏற்று, அவர்களுக்கு வாழ்வும் அளித்து வருகிறது தமிழக அரசாங்கம். இதுவிடயத்தில் மத்திய அரசின் 'ஆசீர்வாதமும்' அனுமதியும் உதவியும் தமிழக அரசுக்கு உண்டு. தமிழகத்தின் பல இடங்களிலும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு முகாம்களை அமைத்துக் கொடுக்கும் அளவுக்குத் தமிழக அரசு தாராளமாக நடந்து கொள்கிறது. இந்த வகையாலும் 'வசதிகள்' காரணமாகவும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் இப்போது தங்கியுள்ளார்கள். இலங்கையில் போர் ஆபத்தினால் உண்டாகும் உயிர்ப் பாதுகாப்பு அபாயத்தின் அச்சமின்றி வாழ்கிறார்கள். அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதிலும் ஏனைய வசதிகளைச் செய்வதாலும் உண்டாகும் செலவு தமிழக அரசுக்கு - இந்தியாவுக்கு - பொருளாதார ரீதியாக ஒரு சுமை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதன் காரணமாக மேலும் மேலும் ஈழத்து அகதிகளின் சுமையைத் தாங்குவது கஷ்டம் என்ற உணர்வினால் 'இந்து' பத்திரிகை கூறியதுபோல, ஈழத் தமிழ் அகதிகள் குறித்து இந்தியா வெளியிடப்படாத நிலைப்பாடு ஒன்றுக்கு வந்துள்ளதோ என்ற சந்தேகம் பிறக்கிறது. இத்தகைய சந்தேகமே அகதிகளுக்கான ஐ.நா. தூதரக உயர் அதிகாரிகளுக்கும் வந்திருக்க வேண்டும். இலங்கையிலிருந்து சென்ற ஈழத் தமிழ் அகதிகள் பலர் கடலில் மூழ்கிய சம்பவங்கள் ஐ.நா. அதிகாரிகளின் சந்தேகத்தை மேலும் வலுவடையச் செய்திருக்கும்.**

**குறிப்பாக வடபகுதியில் போர் தீவிரமடைந்த வேளை, தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்களை - கடல் நடுவே உள்ள மணற்றிட்டுக்களில் படகோட்டிகளால் இறக்கிவிடப்பட்டு நிராதவராக நின்றவர்களை - காப்பாற்றித் தமிழகத்துக்குக் கூட்டிச் செல்வதற்கு இந்தியக் கரையோரக் கடற்படையினர் மறுத்தனர். இதுவும் இந்தியா ஈழ அகதிகள் விடயத்தில் மனிதாபிமான உதவியை மறந்துவிட்டதோ என்ற சந்தேகத்தையும் உருவாக்கியது. ஈழத் தமிழ் அகதிகளை இந்தியாவுக்குக் கூட்டிச் செல்லும் மீனவர்கள் மற்றும் படகோட்டிகளுக்கு, சிறைத்தண்டனை உட்படக் கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் இந்திய அரச தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதுவும் ஈழத் தமிழ் அகதிகளுக்குத் தஞ்சம் அளித்த இந்தியாவின் மனிதாபிமானத்தை மாற்றிவிட்டதோ என்ற சந்தேகத்தை எழுப்பியது.**

**எப்படியோ, இந்தச் சந்தேகங்களை எல்லாம் போக்கி இந்தியக் கடற்பரப்புக்குள் வரும் ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை என்று இந்திய அரசு - புதுடில்லி அதிகாரிகள் - அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். இலங்கைக்கு - அதன் தமிழ்ப் பிரதேசங்களுக்கு - சிறிது தூர தொலைவில் உள்ள நாடு இந்தியாவின் தமிழகம். தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு சரித்திர பூர்வமானது. ஆகையால் தமக்கு உயிராபத்து என்றதும் ஈழத் தமிழர்களின் மனக்கண் முன்வருவது தமிழகமே. ஈழத்தமிழர்களுக்கு ஆபத்தில் உதவவேண்டிய, மனிதாபினமான உதவியைச் செய்ய வேண்டிய இரத்த உறவு சார்ந்த பொறுப்புத் தமிழகத்துக்கு உண்டு. அதனைத் தட்டிக்கழிக்கத் தமிழக அரசு முனையலாகாது.**

**இந்தியாவை எடுத்துக்கொண்டால், சர்வதேச சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் அகதிகளைக் காப்பாற்றுவதற்காகத் தனது வளங்களைப் பயன்படுத்தவேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு - என்று மனித உரிமைகள் நிலையம் ஒன்று சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஈழத் தமிழ் அகதிகள் விடயத்தில் இந்தியாவுக்கு நிலைமாற்றம் உண்டாகாதிருக்க இவை உதவட்டும்.**

# லக்ஸ்மன் ஜெயக்கொடி விவகாரம்; சர்ச்சை மேலும் வலுக்கிறது!

கொழும்பு,செப்.12

அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகருமான லக்ஸ்மன் ஜெயக்கொடியின் பெயர் பொ.ம.ஐ.முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம்பெறாமல் போனதை அடுத்து எழுந்துள்ள சர்ச்சை மேலும் வலுவடைந்து வருவதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமக்கு வழங்கப்படும் வெளிநாட்டுத் தூதர் பதவியுடன் தான் திருப்திப்பட்டுக் கொள்ளமுடியாது என்று அமைச்சர் ஜெயக்கொடி கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது விருப்பங்களை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறிய போதிலும் - தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபடுவதில் தமக்குள்ள அக்கறையை அவருக்கு தெரியப்படுத்திய போதும்கூட - பயன் எதுவும் கிட்டவில்லை என்று ஜெயக்கொடி வேதனையடைந்துள்ளதாகவும் - தெரிகிறது.

தேசியப்பட்டியலில் உள்ள பெயர்களில் மாற்றம் செய்வது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபெண்டி தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு கொண்டதாகவும் எனினும் அது சாத்தியப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. தேர்தல் முடிந்த பின்னரே இத்தகைய மாற்றம் ஒன்றைச் செய்ய முடியும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறிவிட்டதாகவும் தெரிகிறது.

நான்கு தசாப்தகாலமாக நாட்டுக்குச் சேவை செய்த லக்ஸ்மன் ஜெயக்கொடியின் மகன் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட அனுமதி கோரியபோது அதற்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

சபாநாயகர் கே.பி.இரத்தினாயக்காவின் பெயரும் பொ.ம.ஐ. முன்னணியின் தேசியப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

## பெருமாளுக்கு அதிஉயர் அரச பாதுகாப்பு ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் ஜயலத்

கொழும்பு,செப.12

ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்திருந்த வரதராஜப்பெருமாளுக்கு பொ.ம.ஐ.முன்னணியின் தேசியப்பட்டியலில் இடமளிக்கப்பட்டு அவர் அரச பங்களாவில் அதிஉயர் அரச பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருவது ஏன்?

இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார் ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன.

தான் மேற்கொண்ட ஈழப் பிரகடனத்தை பெருமாள் இன்னமும் வாபஸ் பெறவில்லை. ஆனால் அரசு ஓர் அமைச்சருக்கு வழங்கப்படுவதை விட அதிக சலுகைகளை அவருக்கு வழங்கியிருப்பதன் மர்மம் என்ன? என்றும் ஜயலத் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜகிரியவில் ரவிகருணாநாயக்கவின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே ஜயலத் இதனைத் தெரிவித்தார். (ஐ-20)

## புலிகள் மூவர் உயிரிழப்பு

வெவ்வேறு சம்பவங்களின்போது தமது தரப்பில் உயிரிழந்த மூவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி சாவகச்சேரி பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதல் சம்பவம் ஒன்றில் நகுலன் (பழனி நந்தகுமார் - வவுனியா) என்பவரும் -

கடந்த 9ஆம் திகதி அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் கலைவாணன் (செல்வராஜா விமலராஜா - யாழ்ப்பாணம்), என்பவரும் -

அதேதினம் நாவற்குழிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் சதீஸா (கந்தையா விமல் ரஞ்சிதம் - மட்டக்களப்பு) என்பவருமே உயிரிழந்தவர்களாவர். (ஐ-8)

## 1,000 குழுக்களை ஜே.வி.பி அமைக்கும்

கொழும்பு,செப்.12

வாக்களிப்பின்போது வாக்குச் சாவடிகளைக் கண்காணிப்பதற்காக நாடு முழுவதும் ஆயிரம் குழுக்களை ஜே.வி.பி. அமைக்க உள்ளது.

வாக்களிப்பில் மோசடிகள் ஏதும் இடம்பெறுவதைக் கண்காணிப்பதும் வெளியார் வாக்குச்சாவடிகளுக்குள் செல்வதைத் தடுப்பதுமே இக்குழுக்களின் முக்கிய பணியாக இருக்கும் என்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர், பௌத்த மத குரு, பொதுமக்களில் ஒருவர் ஆகியோரா இக்குழுக்களில் இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)

# வெளிநாட்டு அவதானிகள் முதலில் வடக்கு - கிழக்குக்கு

கொழும்பு,செப்.12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்காகக் கொழும்பு வந்து சேர்ந்துள்ள ஆறு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் வடக்கு - கிழக்குக்கு அனுப்பப்படவிருக்கின்றனர் என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலைக் கண்காணிக்கும் இயக்கம் தெரிவித்துள்ளது.

முதலாவது கண்காணிப்பாளர் குழு கடந்த வியாழக்கிழமை கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளது என்றும் -

ஏனையோர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு இடையில் கொழும்பு வந்து சேருவர் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாத முடிவுக்குள் வந்து சேரவுள்ள ஐம்பது கண்காணிப்பாளர்களும் மூன்று வாரங்கள் இங்கு தங்கித் தமது பணிகளை மேற்கொள்வர் என்றும் -

வன்முறைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வடக்கு - கிழக்கு, வடமேல், வடமத்திய, மத்திய ஆகிய மாகாணங்களில் கூடுதல் கண்காணிப்பாளர்கள் பணியில் அமர்த்தப்படுவர் என்றும் -

அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஐ-3-186)

## ஒரு பிச்சைக்காரியாகவே நான் நீதிமன்றம் சென்றேன்!

### பத்திரிகையாளரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,செப்.12

இந்த நாட்டில் ஒரு பிச்சைக்காரிக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே நான் நீதிமன்றம் சென்றேன். இந்த உரிமை அனைத்துப் பெண்களுக்கும் உள்ளது. ஜனாதிபதிக்குள்ள உரிமைகளை, அதிகாரங்களை நான் பயன்படுத்தவில்லை.

இவ்வாறு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அலரிமாளிகையில் கடந்தவாரம் செய்தியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைச் சந்தித்த சமயமே ஜனாதிபதி இப்படிக் கூறியதாக "திவயின" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

"சண்டேலீடர்" ஆசிரியர் வசந்த விக்கிரமதுங்க மீதான அவதூறு குற்றச்சாட்டு வழக்குத் தொடர்பாகவே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

"எங்கள் தவறுகளை விமர்சிப்பது நல்லது; அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர்; இனந்தெரியாத ஆயுதபாணிகள் அன்று இரவு வேளைகளில் நடத்திய வன்முறைகளுக்குப் பத்திரிகையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். நாங்கள் அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம். பத்திரிகைச் சுதந்திரம் இல்லாத எந்த நாட்டிலும் ஜனநாயகத்தை ஏற்படுத்தமுடியாது என்பதே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நம்பிக்கை ஆகும்" என்றும் ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாக "திவயின" செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-186)

# தென்னம் தோட்டங்களின் ஊழியர்கள் வேலை இழப்பு!

பளைப்பிரதேசத்தில் இயங்கி வந்த மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஐந்து தென்னந்தோட்டங்களில் கடமையாற்றிய அமையத் தொழிலாளர்கள் பலர் கடந்த ஆறு மாதங்களாக தொழில்களை இழந்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர். தோட்டங்களில் கடமையாற்றிய 25க்கும் மேற்பட்டோருக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

பளைப்பிரதேசத்தில் புதுக்காடு, இத்தாவில், கோயில்காடு, முகமாலை, புலோப்பளை, தட்டுவன்கொட்டி ஆகிய தென்னந்தோட்டங்களில் கடமையாற்றிய தொழிலாளர்களே தொழில்களை இழந்துள்ளனர்.

இதே வேளை -

எழுதுமட்டுவாழ் கரம்பகத்தில் உள்ள தென்னந்தோட்டம் மட்டுமே சபையினால் பராமரிக்கப்படுவதனால் இந்தத் தோட்டத்தில் கிடைக்கும் வருமானம் மூலம் நிரந்தர ஊழியர்களுக்கு மட்டும் வேதனம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# ஐ. நா. புத்தாயிரம் மாநாட்டில் ஜனாதிபதியின் செய்தி வாசிப்பு!

ஆயுதப் போராட்டங்களால் பாதுகாப்பும், தன்னாதிக்கமும் அச்சுறுத்தப்படும் நாடுகளுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரம் ஆண்டு உச்சி மாநாட்டிற்கு இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா அனுப்பியுள்ள விசேட செய்தியில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் எந்த ஓர் அமைப்புக்கும் எந்த ஒரு நாடும் பாதுகாப்போ, ஏனைய வசதிகளோ வழங்கக்கூடாது. எந்த ஒரு நாட்டிற்கும் உள்நாட்டில் ஏற்படக்கூடிய ஆயுத அமைப்பின் சவால் உலக நாடுகள் அனைத்துக்கும் எதிராக விடுக்கப்படும் சவாலே ஆகும்.

நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள தேசத்திற்கு உதவ சகல நாடுகளும் முன்வரவேண்டும். இது இடம்பெறாவிடின் ஜனநாயகம் அழிந்துவிடும் - என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்தச் செய்தியை ஐ.நா.மாநாட்டில் வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வாசித்தார். (ஐ-5-8)

## பிஸ்ரல் தயாரிப்பு தொழிற்சாலை கண்டுபிடிப்பு

இலத்திரனியல் செயற்பாடு கொண்ட - பற்றறியில் இயக்கக் கூடிய - பிஸ்ரல்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அம்பலாங்கொடையில் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தகவல் ஒன்றின் பேரில் ராகம பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை விசாரணை செய்ததையடுத்து இந்தத் தொழிற்சாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நபர் தயாரித்த பிஸ்ரல் ஒன்று 25 ஆயிரம் ரூபாவுக்குப் பாதாள உலகக் குழுவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. (ஐ-3)

## கொத்தணி வாக்களிப்பு நிலையம்

யாழ்ப்பாணம்,செப்.12

வரணிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வலி.தென்மேற்கு மற்றும் நல்லூர்ப்பகுதியில் தங்கியுள்ளவர்களுக்காக கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், அரசாங்க அதிபருமான க.சண்முகநாதனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் இரண்டாயிரமாம் ஆண்டில் பதிவுகளை மேற்கொண்ட இயந்திரவியல் டிப்ளோமா மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் சகல மாணவர்களும் வருகைதந்து தமது மாணவர் பதிவுப் புத்தகம் மற்றும் திருத்தப்பட்ட ஒப்படைகளைப் பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## அமெரிக்கப் பயிற்சி நிறைவு

கொழும்பு,செப்.12

இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளித்த அமெரிக்கப் படையினர் பயிற்சி முடிந்து நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு இடையிலான 'பலன்ஸ் டைல்' என்ற பயிற்சியே முடிவடைந்துள்ளது. இராணுவத்தின் 53ஆவது டிவிசனின் விசேட கொமாண்டோ அணியும், கடற்படையின் எஸ்.பி.எஸ்.கொமாண்டோ படையணியுமே அமெரிக்கப்படையினரிடம் பயிற்சி பெற்றுள்ளன. (ஐ)

**உதயவாக்கு**

**சாவதற்கு அஞ்சுபவர்கள் இரண்டு வகையினர்தான். ஒருவர் பிறருக்கு இன்னல் இழைத்து அதனால் பிழைப்பவர். மற்றவர் இந்த உலகின் மண், பெண், பொன் ஆகிய ஆசை பிடித்து அலையும் பேயினர்.**

*- பட்கே*

## 16 குடும்பங்கள் வன்னிக்கு இடம்பெயர்வு

தென்மராட்சியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் ஷெல் தாக்குதல்களால், 16 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வன்னிபோய்ச் சேர்ந்துள்ளதாகவும் - இவர்கள் அக்கராயன் கோணாவில் அ.த.க பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் -

வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ-8)

**நாளை**

**ஆவணி 28**

**புதன்கிழமை**

*திதி:* பூரணை
பின் இரவு 1.24 வரை.
*நட்சத்திரம்:* சதயம்
முற்பகல் 11.57 வரை.
பூரணை விரதம் - கரிநாள்
*சுபநேரம்:* 4.33 - 6.03
*ராகுகாலம்:* 12.03 - 1.33
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# காலம் கடந்து நிற்கும் 'ஒலிம் வரலாற்றுப் பாதையில் ஒரு பா

கிரிக்கெட் விளையாட்டில் மூழ்கிப்போ... நம்மை தடகளப் போட்டிக... பக்கம் திரும்ப வைக்கும் ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 15ஆம்திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தொடங்குகிறது.

இதற்காகக் கோடிக்கணக்கான டொலர்கள் செலவழிக்கப்பட்டுள்ளன. தவிர போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள், வீராங்கனைகளின் உடைகள், காலணிகள் போன்றவற்றுக்கும், அவர்களுக்கான பதக்கங்கள் போன்றவற்றுக்கும் செலவழிக்கும் பெரும் பணம் வேறு பல மில்லியன்களைத் தாண்டும்.

இதைவிட அதிக செலவில் பல திட்டங்களைக் கேள்விப்பட்ட நமக்கு இந்தச் செய்திகள் தற்போது பிரமிக்க வைப்பதில்லை. ஆனால் நிச்சயமாக பண்டைய கிரேக்கத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட வீரர்களை இந்தச் செலவுச் செய்திகள் பொறாமைப்பட வைத்திருக்கும்.

**... போட்டியாளர்கள் வெறும் கால்களுடன் முழுநிர்வாணமாய்... ... பார்க்க வருபவர்களும் இதேபோல்...**

ஏனென்றால் காலணி கூட அணியாமல் முழுநிர்வாணமாய் அடித்துப் பிடித்து போட்டியில் ஜெயித்தால் 'ஒலிவ்'மர இலைகளால் முடி ஒன்றைச் சூட்டி, 'அவ்வளவுதான் சென்று வாருங்கள்' என்று அவர்களை அன்று அனுப்பினார்கள்.

இதுமட்டுமல்ல அன்றைய ஒலிம்பிக்கில் வேறு பல சுவாரஸ்யங்களும் உண்டு.

## ஒலிம்பிக்கின் ஆரம்பம்

நாகரிகத்தில் சிறந்து விளங்கிய பண்டைய கிரேக்கத்தில் திருவிழாக்கள் முக்கிய இடம்வகித்து வந்தன. நாளடைவில் திருவிழாக் காலங்களில் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. 'ஒண்ட வந்த பேய் ஊர்ப்பேயை விரட்டிய' கதைபோல பின்னர் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் முன்னர் இருந்த திருவிழாக்களை விடப் புகழ்பெறத் தொடங்கின.

இத்தகைய போட்டிகளில் இஷ்தீமியான், நிமீயன், ஒலிம்பிக், பைதியன் ஆகிய நான்கு விளையாட்டுப் போட்டிகளும் தேசிய அளவில வீரர்கள் கலந்துகொள்ளும் சிறப்புப் பெற்றிருந்தன.

**... அங்கு நின்ற காவலர்கள் தாயாரின் உடைகளைக் கிழித்து எறிந்த போது தான்...**

இத்தகைய நான்கு போட்டிகளில் ஒலிம்பிக்கைத் தவிர மற்றைய மூன்று போட்டிகளும் புகழ் மங்கிப் போய்விட்டன.

கிரேக்க மன்னர்களின் பிரதான தெய்வமான கிரீஸுக்கு மரியாதை செலுத்தும் திருவிழாவின் போது நடத்தப்பட்டதாலேயோ என்னவோ ஒலிம்பிக்போட்டி புகழ்பெற்று வளர்ந்தது.

இந்தப்புகழ் போட்டி நடக்கும் போது நகரங்கள், மாநிலங்களில் நடந்த யுத்தங்கள், ஒப்பந்தங்கள் கூட நிறுத்தப்படும் அளவுக்கு வளர்ந்தது.

## சரித்திர ஆதாரம்

ஒலிம்பிக் போட்டிகள் தோன்றியது தொடர்பாக பண்டைய கிரேக்க வரலாறுகளில் கூறப்பட்டுள்ளபோதும் தெளிவான செய்திகள் கி.மு 776ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் குறித்தே சரித்திரம் சான்று தருகின்றது.

## முதல் முதல் வென்றவர்

கி.மு.776ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டியில் கிரேக்கர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். (பல ஆண்டுகளின் பின்னர் கிரேக்கர்கள் அல்லாதவர்களும் போட்டிகளில் பங்கு பற்றினார்கள்).

இந்தப் போட்டியில் போட்டியாளர்கள் வெறுங்கால்களுடன் முழு நிர்வாணமாகப் பங்குபற்ற வேண்டும் என்றும் ஆயுதங்களை எடுத்து வரக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டனர்

(உ டகளுக்குள் மறைத்து வைச் க்கும் ஆயுதத்தால் தோற்றவ வென்றவர்களைத் தாக்கிக் ...ால்லக்கூடும் என்ற அச்சமே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது) இந்தப் போட்டியைப் பார்க்க வருபவர்களும் இதேபோல் நிர்வாணமாகவே அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலைமையால் புதிய பிரச்சினைகள் வரக்கூடாது என்று கருதியதாலோ என்னவோ பெண்களுக்கு விளையாட்டு அரங்கிற்குள் அனுமதிதரப்படவில்லை. அதைப்போலவே அடிமைகளுக்கும் 'வெளியே நில்' உத்தரவு தான். இதனை மீறுபவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

இத்தனை கட்டுப்பாடுகளுடன் நடந்த போட்டிகளில் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட 'எல்லிஸ்' நகரைச் சேர்ந்த கோரோபஸ் என்பவர் முதலிடம் பெற்றார். இவரே ஒலிம்பிக் போட்டிகளில் சரித்திரப் பதிவுகளின்படி முதல் வெற்றி வீரர் ஆவார்.



1900ஆம் ஆண்டில் நடைபெற்ற நவீன ஒலிம்பிக்கில் இடம்பெற்ற 800மீற்றர் ஓட்டப் போட்டியில் வீரர்கள் வெற்றிக் கோட்டை முந்தித் தொட விரையும் காட்சி.

அப்போதைய போட்டிகளில் வென்ற வீரர்களுக்கு வழக்கம் போல் 'ஒலிவ்' மரஇலைகளாலான மகுடம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர். இப்போதைய வீரர்களுக்குக் கிடைப்பதுபோல் விளம்பர வருமானம் எல்லாம் - பாவம்- அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் வீரர்களுக்கு இப்போது கிடைப்பதை விட சற்று அதிகமாகக் காதலிகள் அப்போது வீரர்களுக்குக் கிடைத்ததாகக் கேள்வி.

## தடைகளை மீறினார்

பல்வேறு கட்டுப்பாடுகளுடன் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை விமரிசையாக ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வந்தன. (இரண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு இடைப்பட்ட காலம் 'ஒலிம்பியாட்') என்று அழைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஒரு பெண் தடைகளைத் தாண்டி போட்டிகளைப் பார்த்து 'ஒலிம்பிக்சாதனை' படைத்தார்.

பீசிபோரசு என்பவரின் தந்தை இறந்துவிட, அவரது தாயார் அவருக்குப்பயிற்சி அளித்து சிறந்த குத்துச்சண்டை வீரராக உருவாக்கியிருந்தார்.

பீசிபோரசு கி.மு 404இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டபோது ஆண உடையில் மகள் பங்கு பற்றும் போட்டிகளை பரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பீசிபோரசு வெற்றி பெற்றதும் தாயார் போட்டியாளர் இருந்த இடத்துக்கு மகிழ்ச்சியுடன் ஓடிச்சென்றார்.

> **ஒலிம்பிக்கில் "ஊக்க மருந்து"**
>
> 1904ஆம் ஆண்டு அமெரிக்காவின் சென்லூயிஸில் நடைபெற்ற 3ஆவது ஒலிம்பிக்கில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பிரெட்லோஸ் என்பவர் பந்தயத் தூரத்தைக் கடந்து இறுதியில் மைதானத்துக்குள் நுழைந்ததும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவருடன் நின்று புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.
>
> சிறுது நேரத்தில் பிரெட்டிடமிருந்து பதக்கம் பறிக்கப்பட்டது. காரணம் சுமார் பத்து கிலோ மீற்றர் தூரம் அவர் திருட்டுத்தனமாக காரில் வந்தாராம்.
>
> பின்னர் அந்தப் பதக்கம் ஹிக்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது. இன்றைய விதிமுறைகள் அன்று இருந்திருந்தால் ஹிக்ஸுக்கு பதக்கம் கிடைத்திருக்காது.
>
> ஏனென்றால் ஹிக்ஸ் களைப்பை அகற்ற வயிறு முட்ட 'பியர்' குடித்துவிட்டு ஊக்க ஊசியும் போட்டுக் கொண்டு போதையிலேயே போட்டியில் கலந்து கொண்டார்.

போட்டியாளர்கள் நிர்வாணமாக இருக்க வேண்டும் என்பதால் அங்கு நின்ற காவலர்கள் (அவர்களும் நிர்வாணம்தான்) தாயாரின் உடைகளைக் கிழித்தெறிந்த போதுதான் அவர் பெண் என்பது தெரியவந்தது.

அவரது தகப்பன், சகோதரர்கள், கணவன், மகன் என அனைவரும் ஒலிம்பிக் வீரர்கள் என்பதால் மரண தண்டனையிலிருந்து தப்பிய அவர் மன்னித்து விடுதலை செய்யப்பட்டார்.

**தேசத்தை இணைக்கும் சர்வதேசத் திருவிழா ஆரம்பமாகின்றது**

## பண்டைய ஒலிம்பிக்கின் வீழ்ச்சி

கிரேக்கத்தை ரோமானியர் கைப்பற்றிய பின்னர் போட்டிகளின் பரீதான ஆர்வம் குறைந்தது. நீதிபதிகளிடையேயும், வீரர்களிடையேயும் ஊழல் மலிந்தது. (கிரிக்கெட் சூதாட்ட ஊழல் ஞாபகம் வருகிறதா?)

இந்த நிலையில் ரோமானியச் சக்கரவர்த்தி முதலாம் தியோடசின் காலத்தில் - கி.மு.393இல் - ஒலிம்பிக் போட்டிகள் நிறுத்தப்பட்டன. அவரது மகன் இரண்டாம் தியோடோசிஸ் ஒலிம்பிக் மைதானத்தையே தகர்த்தார்.

அத்துடன் புகழ் பெற்றிருந்த பண்டைய ஒலிம்பிக்போட்டிகளின் மூச்சு அடங்கியது.

## நவீன ஒலிம்பிக்

கி.மு.393இல் மூச்சு அடங்கிய ஒலிம்பிக் மீண்டும் புத்துயிர் பெற பல நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. காலமும் கனிந்தது.

1875ஆம் ஆண்டு பிரான்ஸைச் சேர்ந்த டைரிபிரேடியன் என்ற அகழ் வாராய்ச்சியாளர் மண்ணுக்குள் மறைந்திருந்த ஒலிம்பிக் மைதானத்தைக் கண்டுபிடித்து வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார்.

இன்றைய நவீன ஒலிம்பிக்கின் பிதாமகர் எனக் கருதப்படும் பிரேடி விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்டிருந்ததால் ஒலிம்பிக் போட்டிகளை மீண்டும் ஆரம்பித்தால் என்ன என்று சிந்தித்தார்.

இந்த எண்ணத்தால் 1892ஆம் ஆண்டு விளையாட்டு வீரர்களுக்கான மாநாட்டைக் கூட்ட முயன்றார்.




ஆனால் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் 'சரி தான் போப்பா, வேற வேலையைப்பார்' என்று யாரும் மாநாட்டில் கலந்து கொள்ளவரவில்லை. அவரது சொந்த நாடான பிரான்ஸைச சேர்ந்தவர்களே ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் அவரைப் பார்த்தார்கள். மகத்தான சாதனையாளர்கள் முதலில் கேலி செய்யப்படுவார்கள்; பின்னரே ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்பது அனுபவபாடம்.

பிரேடியும் இதற்கு விதிவிலக்காகவில்லை.

அவரின் முயற்சிக்கு 1894ஆம் ஆண்டு பலன் கிடைத்தது. அந்த ஆண்டில் நடத்தப்பட்ட வீரர்களுக்கான மாநாட்டில் 12 நாடுகளைச் சேர்ந்த 70 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் நவீன ஒலிம்பிக்கின் முதல் போட்டியை 1896 ஆம் ஆண்டு ஏதென்சில் நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது.

## லக்ஷ்மி கடாட்சம்

இடமும் தயார்; வீரர்களும் தயார்; ஆனால் போட்டியை நடத்த முக்கிய தேவையான லக்ஷ்மி

# ...லிம்பிக்'; ... பார்வை

காட்சி ஒன்றின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டதால் 48 லட்சம் பேர் இதனைக் கண்டுகழித்தனர். முதல் போட்டியை வெறும் மூவாயிரம் பேரே ரசித்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது போட்டியை அதிக மானவர்கள் கண்டுகழித்ததற்குக் கிளுகிளுப்பான காரணம் ஒன்றும் சொல்லப்படுகிறது.

இந்தப்போட்டியில் தான் முதல் முதலில் பெண்கள் போட்டிகளில் பங்குபற்றினர். அதுவும் டெனிஸ், கோல்ப் ஆகிய இரு போட்டிகளில் தான் அவர்கள் போட்டியிட்டனர்.




ஏதென்ஸின் 'கிரீஸ்' கடவுள் கோயில் இது. இந்தக் கோயிலின் திருவிழாக்களில் பண்டைய ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கடாட்சம் - அதுதான் ஐயா பணம் - கிடைக்கவில்லை.

போட்டியை நடத்த கிரீஸ் விளையாட்டுக்குழு ஆர்வமாக இருந்தாலும் அதற்கான நிதியை

பிரிட்டனைச் சேர்ந்த சர்லோட்டி கூப்பர் என்ற பெண் முதல் தங்கப் பதக்கம் பெற்ற வீராங்கனையானார்.

கல்கத்தாவைச் சேர்ந்த நோர்மன் பிரட்சார்ட் என்பவர் ஐரோப்பாவுக்குச் சுற்றுலாச் சென்றபோது தற்செயலாக 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்றார். ஒலிம்பிக் தடகள போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஒரே இந்தியர் இவரே.

## ... நடுவர்களிடையேயும் வீரர்களிடையேயும் ஊழல் மலிந்தது.

ஒதுக்க அரசிடம் போதிய வசதி இருக்கவில்லை.

இந்த நிலையில் கிரேக்க மன்னர் பரம்பரையைச் சேர்ந்த இளவரசர் கான்ஸ்டன்டெயின் உதவிக்கரம் நீட்டினார். கிரேக்கத்திலும், வெளிநாடுகளிலும் நிதி திரட்டி அவர் வழங்கினார்.

முதலாவது ஒலிம்பிக் போட்டியில் ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பிரிட்டன், பல்கேரியா, சிலி, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, ஹங்கேரி, சுவீடன், சுவிற்சலாந்து, அமெரிக்கா ஆகியவற்றுடன் பதின்மூன்றாவது நாடாகப் பழம்பெருமையுடன் கிரீஸும் கலந்துகொண்டது.

முதலாவது நவீன ஒலிம்பிக்கின முதலாவது தங்கப்பதக்கத்தை அப்போது அமெரிக்க ஹவார்ட் பல்கலைக்கழக மாணவராக இருந்த ...ரிஸ்கம்ப் வென்றார்.

1900ஆம் ஆண்டு 2ஆவது ஒலிம்பிக் போட்டி பாரிஸில் கண்

**- பாமரன் -**

அதன் பின்னர் ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஏறுமுகம் தான். இடையிடையில் முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்களினால் தடைப்பட்ட போதும் புதுப்பொலிவுடன் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக்போட்டிகள் வெற்றிகரமாக நடந்து வந்தன.




அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்ட பண்டைய ஒலிம்பிக் மைதானத்தில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட கல்லாலானதகழி.

### ஒலிம்பிக் கொடி

முதலாம் உலகப்போரின் பின்னர் 1920ஆம் ஆண்டு ஆன்ட்வெப்பில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஒலிம்பிக் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.

ஐந்து கண்டங்களையும் குறிக்கும் முகமாக மேலே நீலம், கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்களில் 3 வட்டங்களும், கீழே மஞ்சள், பச்சை ஆகிய நிற வட்டங்களும் இணைந்துள்ள ஒலிம்பிக் கொடி போட்டியின் தொடக்கத்தில் ஏற்றப்பட்டு பெருமிதத்துடன் பறந்தது.

அத்துடன் இந்தப் போட்டியில் தான் ஒலிம்பிக் வீரர்கள் உறுதி மொழி எடுக்கும் சம்பிரதாயம் அறிமுகமானது.

பெல்ஜியத்தைச் சேர்ந்த வாள் வீச்சு வீரர் விக்ரர் போஜிப் வீரர், வீராங்கனைகள் சார்பாக உறுதி மொழி எடுத்தார்.

இந்தப்போட்டியின் பின்னர் அதிக மாறுதல்களோ, தடங்கல்களோ இல்லாமல் ஒலிம்பிக் போட்டிகள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன.

இடையில் இஸ்ரேலிய போட்டியாளர்கள் குண்டுவெடிப்புக்கு பலியானது போன்ற ஒரு சில துயரங்கள் நடைபெற்றபோதும், உலக நாடுகளின் ஒற்றுமையை வலியுறுத்தும் ஒலிம்பிக் போட்டிகள் ஆண்டொரு வண்ணமாக சிறப்படைந்தே வருகின்றன. ❑

# அருளைப் பொழிகின்ற, அறிவைத் தருகின்ற சந்நிதிக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

இன்று தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாத் திருநாளாகும். முருகப் பெருமானுக்கும் தமிழருக்குமிடையேயுள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற்பட்டதெனலாம். தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இலங்கையின் பல பகுதிகளில் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கருணைக்கடலான கந்தனுக்கு இலங்கையில் கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், மண்டூர், சித்தாண்டி, வெருகல் ஆகிய இடங்களில் ஆலயங்கள் உள்ளன.

இன்று செல்வச்சந்நிதியானின் தேர்த்திருவிழா நாளில் எமது சிந்தனை, செயல், மொழியாவற்றையும் அவன்பால் திருப்பி அருள்பெறுவோமாகுக. அடியார்கள் பலர் முருகன், குமரன், குகனென்று மொழிந்துருகுஞ் செயலை இங்கே இன்று காணலாம். அடியார்கள் பக்திப்பரவசத்துடன் கைதொழுது வணங்கி 'முருகா', கந்தா!, குமரா!, முத்துக் குமரா! சரவணபவனே!, சந்நிதிபதி வாழ் வேலா!, கடம்பா!, கார்த்தி கேயா!, கலியுகவரதா!, எங்களைக் காத்திட வா! வா! என்று கல்நெஞ்சம் கரைந்தொழுகக் கண்ணீர் சொரிய அழும் காட்சி நெஞ்சைத் தொடும்.

சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்றும் நல்லூர் முருகனை அலங்காரக் கந்தன் என்றும் அழைப்பார்கள். சந்நிதியில் இயற்கை வழிபாட்டுமுறை பின்பற்றப்படுகின்றது. அதாவது ஆகமங்கள் சாராத வழிபாட்டு மரபு. இங்கு வாய்கட்டிப் பூஜை வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். அன்பு, அருள், பக்தி, அமைதி, மௌனம் ஆகிய மேலான மார்க்கங்களை இப்பூஜை வழிபாடுகள் கொண்டுள்ளன.

## தானாகமுளைக்கும் வள்ளிக்கொடி

இங்கு ஓடும் தொண்டமனாறு வல்லிநதி என்னும் பெயருடன் விளங்கியது. தொண்டைமான் என்ற அரசன் இதனைத் கடலுடன் வெட்டி சங்கமிக்க விட்டான். இந்நதியில் கடல்நீர் உட்புகுந்தபடியால் இந்நதி உப்புநீரானது. இந்த ஆலயத்தின் தலவிருட்சம் பூவரச மரமாகும்.

சந்நிதி ஆலயத்தில் மஹோற்சவத்திற்கான கொடியேற்றும் கிரியைகள் நடைபெறுவதில்லை. இவ்வாலயத்தில் உட்திண்ணையில் வள்ளிக்கொடி தானாகவே முளைத்து உற்சவ காலத்தை உணர்த்துகின்றது. ஏனைய ஆலயங்களில் இல்லாத தனித்துவமான வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக இது சந்நிதியில் இடம்பெறுகிறது.

மகேஸ்வர பூசை என்கின்ற பொழுது சந்நிதியில் மிகுந்த சிறப்பு உண்டு. இங்கு வரும் பக்தர்கள்



உணவு உண்ணாமல் செல்லும் வழக்கம் இல்லை. இவ்வாலயத்தைச் சுற்றி 50 மடங்கள் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. 1940ஆம் ஆண்டில் மயில்வாகனம் சுவாமியாரால் உருவாக்கப்பட்ட 'ஆனந்தா ஆச்சிரமத்தின்' சிறப்பை அடியார்கள் இன்றும் போற்றுகின்றனர். இவர் 1985ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவரது அன்புக்கும் அருளிற்கும் பாத்திரமாக விளங்கிய சீடனாகிய சைவத்திரு. செ.மோகனதாஸ் அவர்கள் இன்று 'சந்நிதியான் ஆச்சிரமம்' என்ற ஸ்தாபனத்தை உருவாக்கி அன்னதானத் தொண்டை சிறப்பாக நடத்தி வருகின்றார். மேலும் சமயத்தை சமூக நோக்கில் சிந்தித்து பல சமூகசேவைகளையும் குறிப்பாக 'ஞானச்சுடர்' என்ற மாதாந்த மலரை வெளியிடும் சந்நிதியான் ஆச்சிரம கலை,பண்பாட்டுப் பேரவையினரின் செயற்கரிய செயல்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாலயத்திற்கு பக்தி மணம் கமழும் தெய்வீக வரலாறு உண்டு. திருச்செந்தூரிலிருந்து முருகப்பெருமானால் தூதுவராகச் சூரனிடம் அனுப்பிய வீரவாகுதேவர் வல்லி நதிக்கரையில் காலடி எடுத்து வைத்தார் எனவும் இப்பாதச் சுவடுகள் இன்றும் ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் காட்சியளிக்கின்றன என்ற வரலாறும் உண்டு. மேலும் சூரனிடத்தில் சென்று திரும்பிய வீரவாகுத்தேவர் தற்பொழுது கோயில் உள்ள இடத்தில் வேலாயுதத்தை ஸ்தாபித்து மாலைச் சந்திப் பூசையை நிறைவேற்றினார் எனவும் வீரவாகுதேவரால் சந்திக்கடன் செய்யப்பட்ட இடமே சந்நிதியாக மருவி செல்வச்சந்நிதி என்னும் திருநாமத்தைப் பெற்றது எனவும் கூறுவார்.

ஐராவசு என்னும் முனிவரும் மேற்படி இடத்தில் வழிபாடு செய்து முத்தியடைந்தார். இவர் சமாதியடைந்த இடம் தான் இப்பொழுது பூவரசமரம் இருக்கும் இடமாகும். இன்றைய வரலாற்றைப் பார்க்கும் பொழுது மருதர் கதிர்காமரே இவ்வாலயத்தைத் தோற்றுவித்தார் என்பது தெளிவு.

*சமூகஜோதி*
**கா.கணேசதாசன்.**

இங்கு முருகன் கட்டளைப்படி அறுபத்திஐந்து ஆலம் இலைகளில் திருவமுது படைக்கப்படுகின்றது. இதனை அடியார்கள் மருந்து என வாங்கியுண்டு தங்கள் நோய்கள் நீங்கப் பெறுகிறார்கள். கதிர்காமத்தில் திருவிழா நடைபெறும்பொழுது சந்நிதிமுருகனே எழுந்தருளுகின்றார் என்ற ஐதீகம் இவ்வாலயத்திலுண்டு. இங்கு நூற்றுக்கணக்கான பக்தர்கள் திருவிழாக்காலத்தில் பாற்காவடி, பறவைக்காவடி, செடில்காவடி, கூத்துக்காவடி, தூக்குக் காவடி என்று பலவிதமான காவடிகளை எடுத்து நேர்த்தி தீர்ப்பர். பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்திவருவார்கள். இதனைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும்.

இப்படியான பல வரலாற்றுச் சிறப்புகளுடன் பொருந்திய சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன் மட்டுமல்ல அருளைப் பொழிகின்ற, அறிவைத்தருகின்ற, நோய்களைத் தீர்க்கின்ற, அல்லல்களை அகற்றுகின்ற கந்தனும் கூட. எனவே முருகன் அடியார்களே! ஒவ்வொருவரும் சந்நிதி முருகனை வழிபட்டு இம்மைமறுமை பலன்களை பெறுவோமாக! ✻

## சந்நிதியான் வருகின்றான்

அலங்கரித்த தேரில் இன்று
அழகு முருகன் வருகின்றான்
சனங்கள்எல்லாம் கூடியிழுக்க
சந்நிதியான் வருகின்றான்.

மயிலில் உலகைச் சுற்றியவன்
மனமிரங்கி வருகின்றான்
அடிமை வாழ்வை உடைத்தெறிந்து
உரிமை வழங்க வருகின்றான்

ஈழமண்ணைக் காத்திடவே
ஈசன் மகன் வருகின்றான்
அமைதிவாழ்வைத் தந்திடவே
தேரில் ஏறி வருகின்றான்.

- இ.அ.அமலரட்ணம்.

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு.செப்.12

வலிகாமம் கல்வி வலய உடுவில் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு :-

**16 வயதுப் பிரிவு**

★ இணுவில் இந்துக் கல்லூரி எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தி.

**18 வயதுப்பிரிவு**

★ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

★ஏழாலை மகாவித்தி. எதிர் தமிழ் கந்தையா வித்தி. (ஐ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழைக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

**16 வயதுப் பரிவு**

★ யூனியன் எதிர் அளவெட்டி அருணோதயா.

**18 வயதுப் பரிவு**

★ வயாவிளான் ம.ம.வித்தி. எதிர் இளவாலை மெய்கண்டான் ம.வி.

★ அளவெட்டி அருணோதயா எதிர் மகாஜனா. (86)

## வாக்களிப்பு நிலையங்களை பிக்குமாரும் கண்காணிப்பர்

கொழும்பு,செப்.12

தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பௌத்த பிக்குமார் ஈடுபட தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதையடுத்து -

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் ஒரு பௌத்த பிக்குவையாவது ஈடுபடுத்த தாய்நாட்டை பாதுகாப்பதற்கான அமைப்பு, பிக்குமார் சபை உட்பட பல அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்தத்திட்டத்தை அஸ்கிரிய பீடாதிபதி தவிர்ந்த ஏனைய பீடாதிபதிகள் வரவேற்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களைப் பாதுகாக்க பிக்குமார் செல்வதால் அவர்கள் அவமதிக்கப்படும் நிலை ஏற்படும் என அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் -

ஐ.தே.கட்சியும், ஜே.வி.பியும் வாக்களிப்பு நிலையங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன. (ஐ-3-6)

## சிறுவர் விளையாட்டு விழா

வலி.தெற்கு,செப்.12

கந்தரோடை கற்பொக்கணை காலைமதி சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி க. இதயம் தலைமையில் நிலைய மைதானத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தி.மா.செல்வராசா கலந்து கொள்வார். (க-152)

## செயலமர்வு

வலி.தெற்கு,செப்.12

வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த உடுவில் மற்றும் தெல்லிப்பழை கோட்டங்களுக்கு உட்பட்ட தரம் மூன்று பாடசாலை அதிபர்களுக்கும், பாடமேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர்களுக்குமான பாடமேம்பாடு பற்றிய மீளாய்வும் செயலமர்வும் நாளை புதன்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளன. (க-152)

## தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.12

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு ஆயிரத்து 666 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத் திகதி கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்துள்ளது தெரிந்ததே. (ஐ-5)

## திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.12

ஆத்ம ஜோதி முத்தையா ஞாபகார்த்த சபையினரின் அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருமுறைப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலை இலந்தை கட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலயத்தில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், திருமுறைச்சுவடிஉலா என்பன இடம்பெறவுள்ளன. கலாநிதி பண்டிதமணி மு.கந்தையாவின் சிறப்புரையும் இடம்பெறும். (க-173)

## மருத்துவ மனையில் திறப்பு விழா வைபவம்

நெல்லியடி,செப்.12

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆண்கள் விடுதி, ஊழியர் சைக்கிள்தரிப்பிடம், மகளிர் மலசல குளியல் கூடம், போசன கூடம் என்பன எதிர்வரும் 15ஆம் திகதி காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் போரூட் திட்டமுகாமையாளர் ஆங்கிள் வீந், நிகழ்ச்சி அதிகாரி என்.கோகுலதாஸ் ஆகியோர் பிரதம விருந்தனர்களாகவும் -

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

புதிய கட்டடங்கள் போரூட் அனுசரணையிலும், வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் அனுசரணையிலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. (இ-109)


V.R.G ஓடியோ வீடியோ சென்ரர்

89, K.K.S. வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

CD புதிய, பழைய படப்பிரதிகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

CD முறையில் புதிய, பழைய பாடல்கள் பதிவு செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்:
V.R. கணேஸ்வரன்
தாவடி.

(78283)


# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 11ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/155380/A | 513/157814/A |
| 513/157814/B | 513/157814/C |
| 513/157814/D | 513/157814/E |
| 513/158500/A | 513/158500/B |
| 513/158582/A | 513/158794/A |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/154056/A | 512/156380/A |
| 512/156515/A | 512/156515/B |
| 512/159110/A | 512/159162/A |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/144910/A | 511/144910/B |
| 511/144971/A | 511/144971/B |
| 511/144971/C | 511/144972/A |
| 511/150811/A | 511/150811/B |
| 511/150812/A | 511/150894/A |
| 511/154393/A | 511/154394/A |
| 511/154395/A | 511/154395/B |
| 511/154418/A | 511/154418/B |
| 511/154430/A | 511/154430/B |
| 511/154447/A | 511/154485/A |
| 511/154485/B | 511/154485/C |
| 511/154499/A | 511/154499/B |
| 511/154502/A | 511/154502/B |
| 511/154502/C | 511/154516/A |
| 511/154516/B | 511/154516/C |
| 511/154517/A | 511/154517/B |
| 511/154532/A | 511/154572/A |
| 511/154572/B | 511/154572/C |
| 511/157225/A | 511/157225/B |
| 511/157225/C | 511/157225/D |
| 511/157225/E | 511/157463/A |
| 511/157463/B | 511/157470/A |
| 511/157470/B | 511/157478/A |
| 511/157479/A | 511/157612/A |
| 511/157612/B | 511/157663/A |
| 511/157663/B | 511/159513/A |
| 511/159513/B | 512/156306/A |

### நல்லூர்

| | |
|---|---|
| 513/[illegible]6367/A | 513/146367/B |
| 513/[illegible]0672/A | 513/150672/B |
| 513[illegible]6003/A | 513/156003/B |
| 513[illegible]0743/A | 513/160743/B |
| 513/160743/C | 511/156725/A |
| 511/157008/A | 511/157428/A |
| 511/157428/B | 511/157428/C |
| 511/157435/A | 511/157456/A |
| 511/157456/B | 511/157616/A |
| 511/157635/A | 511/157635/B |
| 511/157635/C | 511/157638/A |
| 511/157638/B | 511/157648/A |
| 511/157648/B | 511/157652/A |
| 512/150248/A | 512/150249/B |
| 512/159238/A | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/152179/A | 513/152179/B |
| 513/152179/C | 513/152179/D |
| 513/152179/E | 513/155185/A |
| 513/155405/A | 513/155405/B |
| 513/155440/A | 513/155440/B |
| 513/155441/A | 513/155441/B |
| 513/156025/A | 513/156025/B |

| | |
|---|---|
| 513/157876/A | 513/157877/A |
| 513/158575/A | 513/158575/B |
| 513/158575/C | 513/158575/D |
| 513/158576/A | 513/158576/B |
| 513/158576/C | 513/158598/A |
| 513/158598/B | 513/158601/A |
| 513/158601/B | 513/158601/C |
| 513/158601/D | 513/158650/A |
| 513/158650/B | 513/158650/C |
| 513/158650/D | 513/158650/E |
| 513/158651/A | 513/158651/B |
| 513/158651/C | 513/158651/D |
| 513/158651/E | 513/158851/A |
| 513/158851/B | 513/158851/C |
| 513/158934/A | 513/160519/A |
| 513/160519/B | 513/160604/A |
| 513/160604/B | 513/160605/A |
| 513/160640/A | 513/160640/B |
| 513/160640/C | 513/160640/D |
| 513/160673/A | 513/160702/A |
| 513/160702/B | 513/160840/A |
| 513/160865/A | 513/160865/B |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/155101/A | 513/155499/A |
| 513/157860/A | 513/157860/B |
| 513/160486/A | |

### உடுவில்

| | |
|---|---|
| 513/155400/A | 513/158648/A |
| 513/158648/B | 513/158648/C |
| 513/158825/A | 513/158825/B |
| 513/158892/A | 513/158892/B |
| 513/160595/A | 513/160913/A |
| 511/144974/A | 511/144974/B |
| 511/144974/C | 511/157215/A |
| 511/157414/A | 511/157414/B |
| 511/157414/C | 511/157431/A |
| 511/157431/B | 511/157431/C |
| 511/157440/A | 511/157440/B |
| 511/157440/C | 511/157441/A |
| 511/157448/A | 511/157448/B |
| 511/157448/C | 511/157448/D |
| 511/157462/A | 511/157604/A |
| 511/157604/B | 511/157604/C |
| 511/157604/D | 511/157608/A |
| 511/157624/A | 511/157624/B |
| 511/157625/A | 511/157626/A |
| 511/157661/A | 511/157661/B |
| 511/157670/A | 511/157670/B |
| 511/157677/A | 511/157677/B |
| 511/157684/A | 511/157684/B |

## ஓய்வூதியக் கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது இம்மாத ஓய்வூதியத்தை எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் வழமையாக ஓய்வூதியம் பெறும் வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும். இலங்கைவங்கி சாவகச்சேரி கிளை மூலம் ஓய்வூதியம பெறுபவர்கள் எதிர்வரும் 18,19ஆம் திகதிகளில் மட்டும் மானிப்பாயில் உள்ள இலங்கைவங்கியில் பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நாள்களில் பருத்தித்துறையில் இயங்கும் சாவகசசேரி இலங்கை வங்கியில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலக கணக்காளர் தெரிவித்துள்ளார். (க-73)

# இடம்பெயர்ந்தோருக்கு உதவி

அண்மைக்கால யுத்த நடவடிக்கைகளை அடுத்து இடம் பெயர்ந்த மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினர் அத்தியாவசிய உணவுப்பொருள்களை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினர் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்போதைய போர் நடவடிக்கைகளால் தென்மராட்சி மற்றும் யாழ். நகரை அண்டிய கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், அரியாலை போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்துவரும் மக்களுக்கு நிவாரணங்களையும், உதவிகளையும் அரசுமூலம் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்ரீ.ல.சு.கட்சியின யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா ஜனாதிபதியுடன் மேற்படி விடயம் தொடர்பாகத் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் -

அந்தச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8-7)


விற்பனைக்கு

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட

YAMAHA V 90

MATE (Newsmate) YCLS 50

மோட்டார் சயிக்கிள்கள் குறைந்த விலையில் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (78273) தொ. பே. எண்–2350


## இருவிழிகளும் இமைக்க மறந்த ஐந்தாண்டு நினைவலைகள்

ஓரடி மண்ணில்
25 - 01 - 1963



ஆறடி மண்ணில்
12 - 09 - 1995

**செல்விசாந்தி மகேந்திரன் (B.A., Trained)**

(ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

ஐந்தாண்டும் எங்ஙனே சென்றதம்மா!
பூத்துக் காய்த்துக் கனிவாய்
என்றுதான் காத்திருந்தோம்
காலனது கணக்கேட்டில்
பதிவுதான் முந்தியதோ!
கண்ணில் தெரியுமும்முருவம்
கண்ணீரைத்தான் வரவழைக்கிறது
விதி வலிது தெரிகிறது
ஆனாலும் மனம் பேதலிக்கிறது
மீண்டொருகால் சாந்தியென
விரைந்து வாரீரோ பாரிற்கு....?

*அச்செழு,*
*நீர்வேலி.*

உம்பிரிவால் என்றும் துயருறும்
**குடும்பத்தினர்.**

(78143)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 - 07 - 1954



மறைவு
12 - 09 - 1990

**அமரர் முருகர் கணேசலிங்கம்**

(மயிலிட்டி வடக்கு, சுன்னாகம்)

எம்மை விட்டு நீ
மறைந்து ஆண்டுகள் பத்து
ஓடிவிட்டாலும்
ஆண்டாண்டு காலம்
எம் நெஞ்சங்களில் நீ வாழ்ந்திருப்பாய்!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
**தாய், மனைவி, பிள்ளைகள், அக்கா, அத்தான், மற்றும் உறவினர்கள்.**

தகவல்:
க.ஸ்ரீரஞ்சித்,
தேசிய கல்வியியல் கல்லூரி,
வவுனியா.

(C/12892)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1978 - 01 - 06



மறைவு
2000 - 06 - 12

**திருமதி சிவானந்தம் சாந்தினி** (தங்கா)

பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே!
தேசம் விட்டுப் போனாய்; நேசமதைத் தொலைத்தாய்;
ஆசையாய் ஆண்குழந்தை அம்மா எனுமுன்
மோசமாய்க் காலன் கவர்ந்தானோ உன்னுயிர்

தங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (12.09.2000) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

*கிளான்,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*

**குடும்பத்தினர்.**

(78064)

## ஒலிப் பதிவு நாடா வெளியீட்டு விழா

வடமராட்சி, செப். 12

யாழ். பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் இசைப் பேரரசு நா.வி.மு.நவரத்தினம் பாடிய 'செல்வச்சந்நிதி முருகன் அருளிசைப்பா மாலை' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்த யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் க. பாலச்சந்திரன் தொடக்கவுரையை நிகழ்த்துவார். வெளியீட்டுரையை இந்துசமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம் நிகழ்த்துவார்.

யாழ்.இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் இவ் விழா நடைபெறவுள்ளது. (க- 173

## மாவட்ட மட்ட விளையாட்டு போட்டி வியாழன் ஆரம்பம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம், 16 ஆம், திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக்குழுத் தலைவருமான திருமதி செ. ஸ்ரீமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டிகள் தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்களும், அஞ்சல் ஓட்ட அணியினரும் இந்தப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள போட்டியாளர்களுக்கான இலக்கங்களும், நிகழ்ச்சி நிரல்களும் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இலக்கங்கள் கிடைக்காத பாடசாலைகள் போட்டி நடைபெறவுள்ள மைதானத்தில் அமைந்திருக்கும் காரியாலயத்துடன் போட்டியின் ஆரம்ப நாளன்று தொடர்பு கொள்ளுமாறு யாழ். கல்வி வலய விளையாட்டுப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

(ஐ-10)

## 358 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல்

1999—2000 ஆம் கல்வி ஆண்டுக்குரிய மகாபொல புலமைப்பரிசில் யாழ். மாவட்டத்தில் 358 பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதிகலை அரங்கில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வு ஜனாதிபதியின் பணிப்புரையின்படி இலங்கை முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இதே தினத்தில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-5-ரி)


உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

### புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் (14-09-2000) வியாழக்கிழமை பிற்பகல் 1.44 மணிமுதல் 2.29 மணி வரையுள்ள தனு லக்கினமும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற புதுமனை புகுவிழா நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து புதுமனையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

விஸ்வப்பிரம்மஸ்ரீ சி. அமரசிங்கம் ஸ்தபதியும் பாரியாரும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(78314)



### கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்

திரு. தி. தியாகச்சந்திரன்

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் தேவகி தியாகராசா**

அவர்கள் காலமான செய்தி கேட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்க உத்தியோகத்தர், ஊழியர்களாகிய நாம் பெரும் துயர் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
காங்கேசன்துறை, (மல்லாகம்).

(சி/12902)



### கேள்விப் பத்திர அறிவித்தல்

**வலயக்கல்வித் திணைக்களம் - தீவகம்**

இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமான என்னால் 2000-09-28 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு. ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/நெடுந்தீவு மகா வித்தி. செயற்பாட்டறை அமைத்த 40'X25' | 500/- | 14,000/- |
| 02. | யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தி. தரம் I வகுப்பறை அமைத்தல் | 100/- | 200/- |
| 03. | யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி தரம் II வகுப்பறை அமைத்தல் | 100/- | 175/- |

01. மேற்படி வேலைகளுக்கு முதலாம் இலக்க வேலைக்கு 'இக்ராட்' (ஐசீரீஏடி) நிறுவனத்தின் தரம் எம் 8இலும் அதற்கு மேற்பட்டவர்களும் இரண்டாம் மூன்றாம் வேலைகளுக்கு தரம் எம் 9இலும் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவை வரி(ஜிஎஸ்ரி) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பொருள்கள் சேவை வரி(ஜிஎஸ்ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை தீவக வலயக் திணைக்களத்தின் வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 2000—09—12 ஆம் திகதியிலிருந்து 2000—09—20 ஆம் திகதி நண்பகல் 12.00மணிவரை தீவக வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலை கட்டட வேலைகள் கிளையில் கட்டடப் பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனியே இரு கடித உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடது புற மேற் பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக் கல்வித் திணைக்களம், தீவகம், வேலணை என விலாசமிடப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2000-09-28 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்துக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களை பாடசாலைக் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

ப. விக்னேஸ்வரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தீவகம்.

பாடசாலைகள் கட்டட வேலைகள் கிளை,
வலயக்கல்வித் திணைக்களம்,
தீவகம் — வேலணை.
2000 - 09 - 11.

(சி/12904)



### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லம்மா நாகலிங்கம்**

தோற்றம் 17—03—1912 மறைவு 25—08—1999

பாசத்துடன் எம்மை அரவணைத்து எமக்கெல்லாம்
ஆதரவாக இருந்து வழிநடத்திய அன்புத் தெய்வமே!
அம்மா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சத்தை விட்டுநீங்காது.

உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், சகோதரி,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(78315)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலும், பாவனையிலுமுள்ள 2 KV (2000 wt) ஜமகா ஜெனரேற்றர் உடனடியாக விற்பனைக்குண்டு. உடனடித் தொடர்புகளுக்கு:- 87, பிறவுண் வீதி (நீராவியடிப்பிள்ளையார் கோயில் அருகில்), யாழ்ப்பாணம். (78198)

கடந்த ஓகஸ்ரில் நடைபெற்ற (2000 A/L) பௌதிகவியலுக்கான விடைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 248, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (College of Commerce க்கு அருகில்) (78256)

நல்ல இன 'அல்சேசன்' நாய் (ஆண்) விற்பனைக்கு உண்டு. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78287)

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு உடனடியாக ஒருவர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றாவளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (78287)

## மணமகன் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1966இல் பிறந்த கேட்டை (முதலாம் கால்) நட்சத்திரம் எட்டில் செவ்வாய் உள்ள கிரகபாவம் 51 உடைய அழகிய பட்டதாரிப் பெண்ணுக்கு (B.sc.) பொருத்தமான படித்த உள்ளூர் அல்லது வெளியூர் வரன்களை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: விள.இல. 1095, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (78267)

## படங்கள் தேவை

1995இல் இடம்பெயர்வை ஒட்டிய மக்கள் பெரும் கூட்டமாக உடமைகள் சகிதம் மாட்டுவண்டில்களுடன் செல்லும் காட்சிகள் கொண்ட வர்ணப்படங்கள் உடன்தேவை. கைவசம் வைத்திருப்போர்கடிதம் மூலமோ அல்லது நேரிலோ சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: இர. சந்திரசேகர சர்மா, உளநலத்துறை, மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம். (78295)

## தவறிவிட்டது

இ.இராசரட்ணம் சிவஞான ஆனந்து என்பவருடைய தே.அ.அ. (இல.627592248v), விசே.அ.அ. (இல.0902038237) என்பன தெல்லிப்பழை துர்க்கை அம்மன தேரிலன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 266, அரசடி வீதி, கந்தர்மடம் அல்லது தெல்லிப்பழை A.G.A அலுவலகத்தில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன். (78299)

யாக்கருவீதி, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவி ஜெயவாணி செல்லையா என்பவரது விசேட அ.அட்டை (0909030137) பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ். பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி 'தங்கம் சன்' கடையில் ஒப்படைத்துதவவும். (78296)

## தவறிவிட்டது

முள்ளிவீதி, அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த கார்த்திகேசு பொன்நேரியம் என்பவரது தேசிய அ.அட்டை, ஓய்வூதியம் (பென்சன்) பெறும் புத்தகம், குடும்ப அட்டை மற்றும் உடுபுடைவைகள் அடங்கிய உரப்பை 09.09.2000 அன்று நல்லூர் அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அம்பாள்வீதி, கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள கியூமடிக்கா முகாமிலோ அல்லது க.சுப்பையா, அம்பாள்வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியிலோ ஒப்படைத்து உதவவும். (78205)

நாவற்குழியைச சேர்ந்த வேலுப்பிள்ளை யோகேஸ்வரி என்பவருடைய தேசிய அ.அட்டை, வி.அ.அட்டை, உத்தியோக அ.அட்டை என்பன 07.09.2000 அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வே.வரதராஜா, ஹற்றன் நஷனல் வங்கியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (78277)

இல.05,ஐயனார் கோயில் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனுமிடத்தைச் சேர்ந்த சிவஞானம் பிரதீபன் என்பவருடைய விசே.அ.அட்டை (இல.0902029841) (10.09.2000) யாழ். பொலீஸ் நிலையத்துக்கும் தட்டாதெருச் சந்திக்குமிடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78276)

உடையார் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை எனும் முகவரியுடைய செல்வி பிரேமமாலினி கந்தசாமி என்பவருடைய தே.அ.அ. (இல.796283122v), விசேட.அ.அ., இராணுவப் பாஸ் என்பனவற்றுடன் 1000/= அளவிலான பணம், துவிச்சக்கர வண்டி லைசன்ஸ் என்பன அடங்கிய மறூன்கலர் பேர்ஸ் 09.0 2000 அன்று பருத்தித்துறையி தவறிவிட்டது. கண்டெடுத்த எ ள் மேற்படி முகவரியிலோ அ லது தர்மா தொலைத்தொடர்பு நிலையம், பருத்தித்துறை எனும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும். (c/12893)

சிவகுமார் கலரஞ்சினி என்பவருடைய தேசிய அ.அ. விசேட அ.அ. என்பன 09.09.2000ஆம் திகதி சனிக்கிழமை துர்க்கையம்மன் ஆலயத்திற்கும் சுன்னாகம் மதவடிக்கும் இடையில் இலங்கை போக்குவரத்துசபை பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புன்னாலைக்கட்டுவன் சந்தி லக்சுமி பவான் தேநீர்க்கடையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (c/12894)

## சாயி சமித்தியில் இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் இரத்ததான நிகழ்வு இடம்பெற உள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களினால் இரத்தம் சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் அன்றைய தினம் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## அடையாள அட்டைகள் அபகரிப்பு

குருநகர்,செப்.12

யாழ்.நகரை அண்டிய பகுதியில் கடந்த சனி இரவு தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவரது அடையாள அட்டைகள் இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டன.

ஈ.பி.டி.பி. அமைப்பின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய குருநகரைச் சேர்ந்த இருவரது அடையாள அட்டைகளே அபகரிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இவர்கள் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

## 166 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

தபால் மூலம் வாக்களிப்பதற்காக யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வி ர்ணப்பங்களில் 166 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் தெளிவாக பூர்த்தி செய்யப்படாமை, உட்பட பல்வேறு காரணங்களினால் இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டதாக யாழ்.தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தபால் மூலமான . வாக்களிப்புக்கு ஆயிரத்து 666 விண்ணப்பங்கள் யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (இ-5)


**மாதாந்த பயிற்சிப் பரீட்சை**
1 - 5 வரை நாளை நடைபெறும்.
6 - 11 வரை அடுத்த வாரம்.
**BOND**
யாழ்.நகர்
(78309)

**விவசாய பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**மாணவர்களுக்கான அறிவித்தல்:**
பின்வரும் பிரிவுகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

1. முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு (2000/2001 புதிய அனுமதி)
2. முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1999/2000)
3. இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1998/1999)
4. முன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1997/1998)
5. நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு (1996/1997,1995/1996)

**பதிவாளர்.** (C/12896)

**அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்**
Brownson Arrowroot POWDER
பிறவுண்சன் அறூட் மாவு
அரறூட் கஞ்சி குழந்தைகள், வயதானவர்கள் எல்லோருக்கும் போசாக்கு மிக்க உணவு.
**BROWNSON INDUSTRIES, COLOMBO - 11**
யாழ்.நகரில் கிடைக்கும் இடம்
ஸ்ரீகாந் எசன்ஸ் அன்குறோசறிஸ்
இல.161A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P - 2219.
(78298)

**COMPUTER**
இன்றைய கணனி உலகில்
உங்களிடம் கணனி இயந்திரம் இல்லையா?
பலதரப்பட்ட மொடல்கள்
* COMPUTER ACCESSORIES
* COMPUTER INK CARTRIDGES
* COMPUTER FLOPPY DISC
* PHTOSTAT TONER POWDER
இன்னும் பல!
மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள நாடுங்கள்:
**லிங்கன் ஸ்ரோர்ஸ்**
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/12897)


We Serve

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்**

**இலவச கண்பார்வை/பொது மருத்துவ பரிசோதனை முகாம்**

காலம்: 13-09-2000 (போயா) காலை 9.00மணிமுதல்.
இடம்: ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு, சுதுமலை தெற்கு.

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்கள்: யாழ். பிரபல **S.M. பெர்ணாந்து ஸ்தாபனத்தினர்.**

பொது மருத்துவ பரிசோதனை சிரேஷ்ட டாக்டர்களினால் மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் நடத்தப்படும்.

நீரிழிவு, இரத்த அழுத்தம், மலேரியா பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதுடன் மருந்தும் வழங்கப்படும்.

குறிப்பு: வசதியற்றோருக்கு மூக்குக் கண்ணாடி வழங்க ஒழுங்கு செய்யப்படும்.

லயன் A.இருதயநாதன்
கழகத் தலைவர்.

லயன் S.S.தங்கராஜா
செயற்றிட்டத் தலைவர்.

(78286)

# நன்றி நவில்கிறோம்

**திரு.த.தனபாலசிங்கம்**
(நூலகர் - கொக்குவில் இந்துக்கல்லூரி)

அவர்களுக்குரியதான சத்திரசிகிச்சைதனை 24.08.2000 ஆம் திகதி அன்று அக்கறையுடன் நிறைவேற்றிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், ஊழியர்களுக்கும், அதுபற்றிக் கேள்வியுற்று நேரில் வந்து அன்புடன் பார்வையிட்டுச் சென்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும், Dr.சி. இராஜேந்திரா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாயிநாதன் கிருபையினால் அவர் பூரண நலம் அடைந்து விட்டார் என்பதனை அன்பர்களுக்கு அறியத்தருகிறோம்!

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(78303)

அன்புடன்
திருமதி சந்திரா தனபாலசிங்கம்

# கண்ணீர் அஞ்சலி

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றும்
**திருமதி ந. சடாட்சராம்பாள்**
அவர்களின் மாமனாகிய
அமரர்
**பரஞானசம்பந்தபிள்ளை நாகலிங்கம்**

அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், போதனாசிரியர்கள், மாணவர்கள்,
தாதியர் பயிற்சிப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(78289)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்/பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
**கலாநிதி சி.மகேசன்**
அவர்களின் அன்புத் தாயாரும்
யாழ்/பல்கலைக்கழக கணனி அலகின் பகுப்பாய்வாளர் (System Analyst)
**திருமதி இராஜசிவசக்தி**
அவர்களின் அன்பு மாமியாரும் ஆகிய
திருமதி
**சின்னத்தம்பி செல்லமுத்து**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணனி விஞ்ஞானத்துறை / கணனி அலகு,
யாழ்/பல்கலைக்கழகம்.

(78305)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் Dr. **கந்தசாமி பாலகிருஷ்ணன்**
[RMO, M.D.H (IND), D.Fc (Cey), M Ac R. ME (HON)]

நிஜத்தில் இணைவு: 1930-06-02 நினைவில் இணைவு: 1999-08-25

திதி : 2000-09-12

(விவரமான நினைவு அஞ்சலி 09.09.2000 உதயனில் முழுமையாக வெளிவந்துள்ளது)

(78171)

## போலி வாக்குகளைக் கண்டுபிடிக்க

# ஸ்ரிக்கர்களை இரகசியமாக அச்சிடும் திட்டம் அம்பலம்

## தேர்தல் ஆணையாளருக்கு நெருக்கடி

தேர்தலில் மோசடிகள் இடம் பெறுவதைத் தடுப்பதற்காக வாக்காளர் அட்டைகளில் விசேடமாக ஒட்டுவதற்கென ஸ்ரிக்கர்களை அச்சிடுவதற்குத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா மிகவும் இரகசியமாக மேற்கொண்ட நடவடிக்கை பகிரங்கமாகியுள்ளதை அடுத்து அது தொடர்பாக அரசாங்க உயர் மட்டத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஸ்ரிக்கர்களை அச்சிடுவதற்கான ஒப்பந்தத்தைத் தேர்தல் ஆணையாளர் கிராண்ட்பாஸைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவரிடம் வழங்கியிருந்தார். ஆனால் ஸ்ரிக்கர் அச்சிடப்பட்ட வர்த்தகரின் அச்சகத்தை திடீரென சோதனையிட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கிருந்த பலரைக் கைது செய்ததுடன் ஒரு தொகுதி ஸ்ரிக்கர்களையும் மீட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் அச்சிடப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே வெள்ளியன்று இரவு அச்சகத்தை முற்றுகையிட்டு பிரஸ்தாப தமிழ் வர்த்தகரையும் அவரது பங்காளர் ஒருவரையும் வேறு ஐவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தேர்தல் திணைக்களத்தின் உத்தரவின் பேரிலேயே இந்த ஸ்ரிக்கர்கள் அச்சிடப்பட்டிருப்பது பின்னர் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து கைதான ஏழு பேரும் மறுநாள் சனிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

தேர்தலில் மோசடி செய்யும் பத்திரங்கள் அச்சிடப்படுவதாக தகவல் கிடைத்ததாகவும் அதனை அடுத்தே சோதனைகளை நடத்தியதாகவும் பின்னர் தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு விடயத்தை உறுதிப்படுத்தியதாகவும் அதாவது, ஸ்ரிக்கர்களை அச்சிடும் ஒப்பந்தம் இந்த வர்த்தகருக்கு வழங்கப்பட்டமை தெரியவந்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க கூறினார்.

கைப்பற்றப்பட்ட ஒரு லட்சம் ஸ்ரிக்கர்களும் மீண்டும் வர்த்தகரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். 30 லட்சம் ஸ்ரிக்கர்களை அச்சிடும் பணி தமிழ் வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மிகவும் இரகசியமாக ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த நடவடிக்கை பகிரங்கமாகியுள்ளமை தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மட்டத்தில் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட வாக்காளர் அட்டையே தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் மோசடிகளை அறிந்து கொள்ளலாம். அதாவது ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படாத அட்டைகள் போலியானவை எனக் கண்டுகொள்ள முடியும் எனத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்போது அந்தத் திட்டம் பகிரங்கமானதால் பயனற்றதொன்றாகிவிட்டது.

இது இவ்வாறிருக்க, அரசாங்க அச்சகம் இருக்கையில் ஸ்ரிக்கர் அச்சிடும் பணியை தனியாருக்கு ஒப்படைத்ததேன்? என்று அமைச்சர்கள் அலவிமௌலானா, பட்டி வீரக்கோன் ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆனால், அரச ஆதரவுடையவர்களே குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவலைக் கொடுத்ததாக ஜே.வி.பி வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். (ஐ)

## ஜனாதிபதி, ரத்வத்தவைக் கொல்ல ஊடுருவிய

# புலிகளின் 7 உளவாளிகள் கண்டியில் சிக்கினராம்!

கொழும்பு, செப்.12

ஜனாதிபதி சந்திரிகா, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆகியோரைப் படுகொலை செய்யும் திட்டத்துடன் ஊடுருவியிருந்த விடுதலைப்புலிகளின் உளவாளிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஏழு பேரை கண்டி விசேட புலானாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர் என்று பொலீஸாரை மேற்கோள்காட்டி 'டெய்லி மிரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கார்க்குண்டு மூலம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கொல்லவும் ஜனாதிபதி கண்டியில் தங்கியிருக்கும் போது அங்கு வைத்து அவரைக் கொலை செய்யவும் இவர்கள் திட்டமிட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டியிலுள்ள படை முகாம்கள், காவல் நிலையங்கள் தொடர்பான வரைபடங்களைத் தயாரிக்கும் பணியும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

மூன்று மாத காலமாக மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கைகளின் பின்னர் இந்த ஏழு சந்தேக நபர்களும் சிக்கியதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைதானோரில் தனியார் கல்லூரி விரிவுரையாளர், முன்னாள் பிரதேச சபைத் தலைவர், சமுர்த்தி முகாமையாளர், கடற்புலி உறுப்பினர், பல்கலைக்கழக விரிவுரையாளர், பல் வைத்தியர் ஆகியோர் அடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-20)

## வீதி திருத்தும் பணி

பல வருடங்களாக குண்டும் குழியுமாக இருந்த வடலியடைப்பு - சங்கானை வீதியைத் திருத்தும் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன என்று வலி.மேற்குப்பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் செய்த முறைப்பாடுகளை அடுத்தே இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (இ-7)

## இராணுவத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசேட கூட்டத்தில் -

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அதன் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், யாழ்.மாநகரசபையின் பிரதிமுதல்வரும் வேட்பாளருமான என்.ரவிராஜ் ஆகியோரும் -

ஈ.பி.டி.பி. சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசாவும் -

புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், செயலாளர் எஸ்.சதானந்தன் ஆகியோரும் -

ரெலோ சார்பில் அபுயூசுப், என்.விநோதலிங்கம் ஆகியோரும் - ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) - செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, அதன் செயலாளர் என்.குமரகுருபரன் ஆகியோரும் -

சுயேச்சைக்குழு-6இன் முதன்மை வேட்பாளரும் ரெலோ முதல்வருமான என்.சிறிகாந்தா ஆகியோரும்-

மற்றும் சில சுயேச்சைக்குழுக்களின் பிரதிநிதிகளும் - கலந்து கொண்டனர்.

கூட்டம் ஆரம்பமானபோது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயமூர்த்தி, யாழ்.நிலைமை தொடர்பாக ஜனாதிபதிக்கு தாம் எழுதிய கடிதத்தை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்தார்.

கூட்டத்தில் முதலில் கருத்து வெளியிட்ட சுயேச்சைக்குழு-6 இன் முதன்மை வேட்பாளர் என்.சிறீகாந்தா பேசுகையில் -

யாழ்ப்பாணத்தில் அரச படைகள் விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது தொடுத்துள்ள இராணுவ நடவடிக்கை காரணமாக ஆயிரக் கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

அங்கு தொடரும் விமானத் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக மக்கள் மத்தியில் பயமும், பதற்றமும் நிலவுகின்றன. - தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து அரச படைகள் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக தேர்தல் பிரசாரம் செய்ய முடியாத நிலை ஒருபுறமிருக்க, மக்கள் தமது உண்மையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும் முடியாத நிலை காணப்படுகின்றது. தற்போதுள்ள நிலை தொடர்ந்தால் மோசடிகள் இடம்பெற வாய்ப்புள்ளன -

மக்கள் உண்மையான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வசதியாக விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தொடுத்துள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும்.

அத்துடன் போர்நிறுத்தம் ஒன்றை அரசு உடன் அறிவிக்க வேண்டும். தேர்தல் ஆணையாளர் இந்த விடயத்தை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் - என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்துக் கருத்துக் கூறிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தேர்தல் முடிவடையும் வரையாவது போர் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரினார்.

அப்போது - தேர்தல் வரை இந்தப் போர் நிறுத்தம் அமுலில் இருக்கலாம். அதன் பின்னர் பதவிக்கு வரும் புதிய அரசு இதை நீடிப்பது குறித்து ஆராயட்டும் - என்று கூறினார் சிறிகாந்தா.

யாழ்.மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை உடன் நிறுத்தவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் வலியுறுத்தினர்.

### புலிகளையும் கோரவேண்டும்

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான எஸ்.தவராசா கருத்துத் தெரிவிக்கையில் - போரை நிறுத்துமாறு அரசாங்கத்தை மட்டும் கோரிப் பயனில்லை. விடுதலைப் புலிகளையும் கோரவேண்டும். தேர்தல் ஆணையாளர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளுக்கு இந்தக் கோரிக்கையை விடுக்கவேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்ட சுயேச்சைக்குழு -6 இன் வேட்பாளரான வைத்திய கலாநிதி என்.சுப்பையா பின்வருமாறு கூறினார்.

குடாநாட்டில் தொடரும் இராணுவத் தாக்குதல்களில் தொண்டர் ஆசிரியை ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்துள்ளனர். 'கிபிர்' விமானங்கள் தாழப் பறப்பதால் அவற்றின் இரைச்சல் காரணமாக பலர் இருதய வியாதிக்கு உள்ளாகி மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்றார்.

விசேட கூட்டத்தில் இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவது தொடர்பாக தெரிவித்த கோரிக்கைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு உறுதியளித்தார்.

(அ-3)



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 28ஆம் நாளாகிய (13.09.2000) புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 11.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மனோகரனுக்கும்**



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுதர்மினாவுக்கும்**

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித் திருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி
**பத்மநாதன் ஈஸ்வரி** தம்பதிகள்
நாக முதலியார் வீதி,
பருத்தித்துறை.

திரு.திருமதி
**மகேந்திரம் இராஜேஸ்வரி** தம்பதிகள்
மரக்கறி வியாபாரி,
பருத்தித்துறை, ஓடக்கரை.

(78293)



## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் இராசையா நவரத்தினம்**
(Teacher, Manipay Memorial English School)
திதி: 12.09.2000

**என்றும் நீங்கா நினைவுடன்**

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

திருமதி ந.இந்திராணி
செல்வன் ந.நரேந்திரன்
செல்வி ந.இந்துஷா

(C/12905)




## சுயேச்சைக் குழு - இல. 6

★ போரை நிறுத்திப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினையைத் தீருங்கள்!

★ எமது மக்களை வாழ விடுங்கள் என்பதை நாடாளுமன்றத்திலும் உலக அரங்கிலும் நேர்மையுடனும், நெஞ்சுரத்துடனும் வலியுறுத்த

சட்டத்தரணி **நல்லதம்பி சிறீகாந்தா**
தலைமையில் போட்டியிடும்
சுயேச்சைக் குழுவை ஆதரியுங்கள்!

(C/12876)



X

# இலக்கண வித்தகர் காலமானார்



இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் நேற்று திங்கட்கிழமை சென்னையில் காலமானார். இவருக்கு வயது 85. இவர் வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி.கணேச ஐயர் அவர்களின் தலை மாணாக்கராவார்.

தமிழ் இலக்கணத்துறையில் பேராசானாகத் திகழ்ந்து பண்டிதர், செந்தமிழ்த் திலகம், மகா வித்துவான் என்னும் பட்டங்களை இவர் பெற்றார். தொல்காப்பியம், நன்னூல் ஆகிய பழந்தமிழ் இலக்கண நூல்களிலும், சங்க இலக்கியம் உட்பட இலக்கிய நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியும் கற்பிக்கும் திறனும் கொண்ட இவர் சைவசித்தாந்த அறி வும் தெளிவும் மிக்கவர்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில் இந்த மூதறிஞருக்கு "இலக்கண வித்தகர்" என்ற பட்டமளித்துக் கௌரவித்தது. நோய் காரணமாக இவர் சிறிது காலம் சென்னையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தார். அவரது இறுதிக்கிரியைகள் சென்னையில் நடைபெறும். (அ)

## செழியனுக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது

நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயரும், பொ.ஐ.முன்னணியின் வேட்பாளருமான செழியன் பேரின்பநாயகத்துக்கு சில தினங்களுக்கு முன்னரே கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தற்போது செய்திகள் வெளியாகி உள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்ததாம்.(இ-7)

# விசேட கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் இன்று திருமலை நோக்கிச் செல்லும் என்றும் -

இதில் பயணம் செய்ய பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை 7 மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்தில் சமுகம் அளிக்கும் படியும் - கேட்கப்பட்டுள்ளது.

இந்தக்கப்பல் பயணத்துக்கான வேலைகள் முடிவடைந்ததும் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம் பெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலுக்கான பயணச்சீட்டு வழங்கப்படும் என்று சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம் : யாழ். இந்துக் கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்.
காலம் : நாளை (13.09.2000) புதன்கிழமை.
தலைமை : திரு. க. சி. குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)
கருத்துரை : 'பாலியல் நோய்கள் - எய்ட்ஸ்ம் அதன் விளைவுகளும்'
வழங்குபவர்: வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் (யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:-
இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/12903)


## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பின் முக்கிய கடமை. எனவே இம் முறையும் அந்தப்பாதுகாப்பை வழங்குமாறு மூன்று மாதங்களுக்கு முன்னரே நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால் பொலீஸார் பாதுகாப்பு வழங்க மறுத்து விட்டனர்- என்றார். (இ-7)


(78203)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



யாழ்.நகரை மீண்டும் கட்டியெழுப்பி
அச்சமற்ற, நிம்மதியாய் வாழ
அளித்திடுவோம் எங்கள் வாக்குகளை
ஈழ் மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!

(ஈ.பி.டி.பி.)

ஈ.பி.டி.பி. எடுத்த முயற்சியை அடுத்து யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள 6600 குடும்பங்களுக்கு இவ்வாண்டு உதவித்தொகையாக 6 கோடி ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.


# கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோரினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட சுயேச்சைக்குழுக்களாகப் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் அணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனும், ரெலோ முதல்வர் சட்டத்தரணி என். சிறிகாந்தாவும், ஆயுதங்களுடன் நடமாடும் கட்சி ஈ.பி.டி.பியே. ஒருகட்சி என்று கூறுவது சரியல்ல. அந்தக் கட்சியிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று - தெரிவித்தனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பிடம் இருந்து ஆயுதங்களை களைவது நடைமுறைச் சாத்தியமான விடயம் அல்ல. எனவே ஆயுதங்களை அவர்கள் தமது அலுவலகங்களில் வைத்திருக்கலாம். மக்கள் மத்தியில் ஆயுதங்களுடன் நடமாடாதிருந்தால் சரி என்றார் ரெலோ முதல்வர் சிறிகாந்தா.

ஈ.பி.டி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா பேசுகையில் - எமக்கு அச்சுறுத்தல் உள்ளதாலேயே ஆயுதங்களை வைத்துள்ளோம். கடந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் போது எமது புங்குடுதீவு முகாம் தாக்கப்பட்டது. எமது ஏழு வேட்பாளர்கள் அதில் உயிரிழந்திருந்தனர். எமது பாதுகாப்புப் பணிக்கே ஆயுதங்களைப் பாவிக்கிறோம் - என்று கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் சகலருக்குமே அச்சுறுத்தல் உள்ளது. அதற்காக ஒரு கட்சி மட்டும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க கூடாது - என்று ஏனைய தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

எந்தக்கட்சியும், குழுவும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க முடியாது. சுதந்திரமான தேர்தலை அது பாதிக்கும். எனவே இது விடயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (இ-3)

## கிழக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கார அமைச்சர் மெடலின் அல்பிறைறுக்கு எழுதிய நீண்ட கடிதம் ஒன்றில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கும் விடயங்களில் சில வருமாறு:-

"சமாதானத்துகான போர்" என்ற இலங்கை அரசாங்கத்தின் கொள்கையையும் அங்குள்ள இப்போதைய நிலையையும் அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்து ஆதரிக்குமாயின் அந்த நாட்டில் உள்ள ஜனநாயக அமைப்புக்களை அது அழிப்பதாகவே முடியும். இலங்கைத் தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளைப் பாதுகாக்க வேண்டுமானால் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதை முழு அளவில் ஆதரிக்க வேண்டும்.

[illegible]லங்கையில் உள்ள இரண்டு இ[illegible]களும் சமாதான சக வாழ்வு வ[illegible]வதற்கு உகந்த தன்னாட்சி அதிகாரமுள்ள இரண்டு அரசியல் நிறுவனங்களை பேச்சுவார்த்தை மூலம் அமைப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் உதவ வேண்டும்.

அதிகாரப்பரவல் மூலம் தமிழர்களின் நியாயபூர்வமான ஜனநாயக அபிலாஷைகளை நிறைவேற்றும் செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடனேயே அமெரிக்க அரசாங்கம் அதற்கு ஆதரவு வழங்கி வருகின்றது. ஆனால் தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்று நம்புவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

இலங்கையில் கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்றுவரும் அரசியல் நடவடிக்கைகள் அந்த நாட்டு அரசாங்கத்துக்கும் சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கும் தமிழர்களுக்கு நீதியான தீர்வொன்றை அரசமைப்புச் சட்டமூலம் வழங்குவதற்கு மன விருப்பம் இல்லை என்பதையே தெளிவாகக் காட்டுகின்றன - என்று உள்ளது.(அ-7)


கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)

A/L 2001
கம்பனி
WED, FRI 3.30 p.m

A/L 2002
வங்கி.கண.இண.கூற்று
TUE,THU 3.30 p.m

BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
(78304)



Member of ITrain (U.S.A)

பொதுக் கூட்டமும் கலந்துரையாடலும்

BIT

இப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாணவர்கள் அனைவரையும் IBMS நிறுவனம் வாழ்த்துகின்றது. அனைத்து மாணவர்களினதும் பெறுபேறுகளை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.

இக்கற்கைநெறி சம்பந்தமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் I.C.T இயக்குநருடன் கலந்துரையாடிய சில முக்கிய விடயங்கள் பற்றி புதன்கிழமை (13.09.2000) மாலை 2.00 மணிக்கு ஆராயப்படவிருப்பதனால் அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அன்றைய கலந்துரையாடலில் இக்கற்கைநெறி சம்பந்தமான கையேடு ஒன்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

Note: இப் பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் யாழ்.மாவட்டத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் உரியது.

IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்
2000 / 2001

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கான தெரிவுப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் எமது தலைமைக் காரியாலயத்தில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளவும்.

பரீட்சை நிலையம்:
* யாழ். இந்துமகளிர் கல்லூரி
* வட்டு. இந்துக் கல்லூரி

காலம்: 13.09.2000 புதன்கிழமை காலை 10.00 மணி (S.L.T)

Director (Ad)

IBMS NO.701, K.K.S. ROAD, JAFFNA. (C/12899)



இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை, நாடகம், நாவல், இலக்கிய விமர்சனம்
என்ற நான்கு பிரிவுகளில் அமைந்த
33 கட்டுரைகளும் 300 நாடகங்களும்
50 சிறுகதைகளும் எழுதிய
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின்
பதினொராவது நூல்.
மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோருக்கும்
பயன்படக்கூடியது. (78197)



## கண்ணீர்க் காணிக்கை

எமது மன்றத் தலைவர்
திரு.தி.தியாகச்சந்திரன்
அவர்களின் அன்புத்தாயார்

திருமதி தேவகி தியாகராசா

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குவதுடன் அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(78319) - உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினர்

அமைதிக்கு உழைப்போம்
அதிகாரப் பகிர்வுக்குக் குரல் கொடுப்போம்
அனைவருக்கும் உதவுவோம்
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக் குழு - 02



X

த.சுபத்திரன் (றொபேட்)



அ.வரதராஜப்பெருமாள்

(78207)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.